# 9.மரபியல்

முன்னோர் அடிச்சுவட்டைப் பின்பற்றி நடப்பது மரபாகும்.

**எப்பொருள் எச்சொலின் எவ்வாறு உயர்ந்தோர்**
**செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே.**

என்பது நன்னூல். (நூ.388) இதற்கு ஏற்பப் பொருள் பற்றிய மரபுகள் பலவற்றையும் தொகுத்துக் கூறுவது மரபியலாகும். உயர்திணை, அஃறிணை என்னும் இருதிணைக்கும் உரிய மரபுகளைத் தொகுத்துக் கூறுவதால் இவ்வியல் **மரபியல்** எனப் பெயர் பெற்றது. இவ்வியலில் அமைந்த நூற்பாக்கள் 112 ஆகும். இவ்வியல் கூறும் செய்திகளை,

1. இளமைப் பெயர்கள்
2. ஆண்பாற் பெயர்கள்
3. பெண்பாற் பெயர்கள்
4. அறுவகை உயிர்ப்பாகுபாடுகள்
5. நால்வகை வருணத்தார்க்குரிய மரபுகள்
5. நூல் மரபுகள்
6. உரை மரபுகள்
7. பத்துவகைக் குற்றங்கள்
8. பத்துவகை அழகுகள்
9. முப்பத்திரண்டு வகை உத்திகள்

என்னும் வகைக்குள் அடக்கலாம்.

## இருதிணைக்கும் உரிய இளமைப் பெயர்கள் (9)

545. **மாற்றரும் சிறப்பின் மரபியல் கிளப்பின்**
**பார்ப்பும்[1] பறழும்[2] குட்டியும்[3] குருளையும்[4]**
**கன்றும்[5] பிள்ளையும்[6] மகவும்[7] மறியும்[8] என்று**
**ஒன்பதும் குழவியொடு[9] இளமைப் பெயரே.**

[இ-ள்] மாற்றுவதற்கு இயலாத அருமைப்பாடு வாய்ந்த சிறப்பினை உடையது மரபின் இயல்பாகும். அம்மரபை ஒட்டிக் கூறப்படும் 1.பார்ப்பு 2.பறழ் 3.குட்டி 4.குருளை 5.கன்று 6.பிள்ளை 7.மக 8.மறி என்னும் எட்டோடு 9.குழவி என்னும் ஒன்றைக் கூட்ட வரும் பெயர்கள் ஒன்பதாகும். இவ்வொன்பதும் உயிரினங்களின் இளமை குறித்து வழங்கும் பெயர்களாகும். (1)

## ஆண்பாற் பெயர்கள் (15)

546. **எருதும்[1] ஏற்றையும்[2] ஒருத்தலும்[3] களிறும்[4]**
**சேவும்[5] சேவலும்[6] இரலையும்[7] கலையும்[8]**
**மோத்தையும்[9] தகரும்[10] உதளும்[11] அப்பரும்[12]**

**போத்தும்[13] கண்டியும்[14] கடுவனும்[15] பிறவும்**
**யாத்த ஆண்பால் பெயர்என மொழிப.**

**(இ-ள்)** *1.எருது 2.ஏற்றை 3.ஒருத்தல் 4.களிறு 5.சே 6.சேவல் 7.இரலை 8.கலை 9.மோத்தை 10.தகர் 11.உதள் 12.அப்பர் 13.போத்து 14.கண்டி 15.கடுவன் என்பவை ஆண்பாற் பெயர்களாகும். இவற்றோடு பிறவாறு வழங்கும் பெயர்களும் செய்யுளிலும் உலக வழக்கிலும் குறிக்கப்படும் ஆண்பாலுக்குரிய பெயர்கள் என்று சொல்லுவர் புலவர்.*

*பிற என்றதனால்* **ஆன், விடை, கிடா** *என வருவனவும் ஆண்பாற்குரிய பெயர்களாகும்.* *(2)*

### பெண்பாற் பெயர்கள் (13)

547. **பேடையும்[1] பெடையும்[2] பெட்டையும்[3] பெண்ணும்[4]**
**மூடும்[5] நாகும்[6] கடமையும்[7] அளகும்[8]**
**மந்தியும்[9] பாட்டியும்[10] பிணையும்[11] பிணவும்[12]**
**அந்தம் சான்ற பிடியொடு[13] பெண்ணே.**

**(இ-ள்)** *1.பேடை 2.பெடை 3.பெட்டை 4.பெண் 5.மூடு 6.நாகு 7.கடமை 8. அளகு 9.மந்தி 10.பாட்டி 11.பிணை 12.பிணவு என்னும் பெயர்களோடு முடிவு பொருந்திய 13.பிடி என்னும் பெயரும் பெண்பாலுக்கு உரியவை ஆகும்.* *(3)*

## I. இளமைப்பெயர்கள்

### பறவைக்குரிய இளமைப் பெயர்கள் (2)

548. **அவற்றுள்**
**பார்ப்பும்[1] பிள்ளையும்[2] பறப்பவற்று இளமை.**

**(இ-ள்)** *மேற்கூறிய* **1.பார்ப்பு 2.பிள்ளை** *என்பவை இளமைப் பெயர்களாகும். இவை இரண்டும்* **பறவை இனங்களுக்கு** *உரியவை ஆகும்.* **(எ-டு)**

தனிப்பார்ப்பு உள்ளிய தண்பறை நாரை *(அகம்.240)*
பைதற் பிள்ளைக் கிளிபயிர்ந் தாங்கு *(குறுந்தொகை.39)* *(4)*

### ஊர்வனவற்றிற்குரிய இளமைப் பெயர்

549. **தவழ்பவை தாமும் அவற்றோர் அன்ன.**

**(இ-ள்)** *மேற்சொல்லப்பட்ட* **1.பார்ப்பு 2.பிள்ளை** *என்னும் இரண்டும்* **ஊர்வனவற்றிற்கும்** *(தவழ்பவை) பொருந்தும் இளமைப் பெயர்களாகும்.* **(எ-டு)**

ஆமைப் பார்ப்பின் அன்ன *(குறுந்.152)*
பிள்ளை தின்னும் முதலை *(ஐங்குறு.24)* *(5)*

**குட்டி என்னும் பெயர் பெறுபவை (4)**

550. **மூங்கா[1] வெருகு[2]எலி[3] மூவரி அணிலொடு[4]
ஆங்குஅவை நான்கும் குட்டிக்கு உரிய.**

**(இ-ள்)** 1.மூங்கா (கீரி) 2.வெருகு (காட்டுப் பூனை) 3.எலி 4.மூன்று கோடுகளைக் கொண்ட **அணில்** என்பவை நான்கும் **குட்டி** என்னும் இளமைப் பெயரால் குறிக்கப்படுவனவாகும்.

மூங்காக்குட்டி, வெருகுக்குட்டி (6)

**பறழ் என்னும் பெயருக்கு உரியவை (4)**

551. **பறழ்எனப் படினும் உறழ்ஆண்டு இல்லை.**

**(இ-ள்)** மேற்சொல்லப்பட்ட **1.மூங்கா 2.வெருகு 3.எலி 4.அணில்** என்கின்ற நான்கும் **பறழ்** என்னும் பெயராலும் அழைக்கப்படும். அதனால் எவ்வித மாறுபாடும் இல்லை.

குட்டி என்பதைப் பறழ் எனவும் பறழ் என்பதைக் குட்டி எனவும் கூறுவது ஏற்புடையதாகும். குட்டியைப் பறழ் எனக் குறிப்பிடும் வழக்கம் சிறுபான்மை என்பது பேராசிரியரின் கருத்தாகும். (7)

**குருளை என்னும் பெயருக்குரியவை (4)**

552. **நாயே[1] பன்றி[2] புலி[3]முயல்[4] நான்கும்
ஆயும் காலைக் குருளை என்ப.**

**(இ-ள்)** ஆராய்ந்து பார்க்கும் நிலையில் **1.நாய் 2.பன்றி 3.புலி 4.முயல்** என்கின்ற நான்கும் **குருளை** என்னும் இளமைப்பெயரால் சுட்டப் பெறும் என்று சொல்லுவர் புலவர். **(எ-டு)**

சாய்செவிக் **குருளை** ....... புனிற்று **நாய்** (சிறுபாண்.130-132)
விழியாக் **குருளை** ...... குறுந்தாள் **பன்றி** (பேராசிரியர் உரை)
இரும்**புலிக் குருளை** (குறுந்.47)
**குருளை** ..... குறு**முயல்** (பேராசிரியர் உரை) (8)

**குருளை – சிறப்பு விதி**

553. **நரியும் அற்றே நாடினர் கொளினே.**

**(இ-ள்)** **நரி**யின் இளமைப் பெயரை ஆராயும் காலத்து அதுவும் மேற்குறித்ததைப் போல் **குருளை** என்னும் பெயருக்கு உரியதாகும்.

நாய் முதலிய நான்கோடும் நரியை ஒருதன்மையதாகக் கூறாமல் பிரித்துக் கூறினார். எனவே குருளை என்னும் இளமைப் பெயர் நரிக்குச் **சிறுபான்மையே** பொருந்தி வரும் என்கிறார் இளம்பூரணர். (9)

**குட்டி, பறழ் எனக் குறிக்கப்படுபவை (5)**

**554. குட்டியும் பறழும் கூற்றுஅவண் வரையார்.**

**(இ-ள்)** நாய், பன்றி, புலி, முயல், நரி என்னும் ஐந்து வகை உயிரினங்களுக்கும் குட்டி, குருளை என்பன இளமைப் பெயர்களாகும். இவ்வாறு கூறுவனவற்றை நீக்கமாட்டார். (10)

**பிள்ளை என்னும் பெயர்க்குரியவை (4)**

**555. பிள்ளைப் பெயரும் பிழைப்புஆண்டு இல்லை**
**கொள்ளும் காலை நாய்அலங் கடையே.**

**(இ-ள்)** நாய் நீங்கலாக முற்கூறப்பட்ட உயிரினங்கள் நான்கு. பன்றி, புலி, முயல், நரி என்னும் அந்நான்கன் இளமைப் பெயர் பிள்ளை எனச் சொல்லுவதும் தவறாகாது. (11)

**மறி என்னும் பெயர்க்குரியவை (5)**

**556. யாடும்[1] குதிரையும்[2] நவ்வியும்[3] உழையும்[4]**
**ஓடும் புல்வாய்[5] உளப்பட மறியே.**

**(இ-ள்)** 1.யாடு (ஆடு) 2.குதிரை 3.நவ்வி (தோணி மான் - புள்ளிமான்) 4.உழை (பசுமான்) 5.விரைந்து ஓடுகின்ற இயல்பினை உடைய புல்வாய் (கலைமான்) உள்ளிட்ட ஐந்தும் மறி என்னும் இளமைப் பெயரைப் பெறும். (எ-டு)

வெள்ளை வெண்மறி (அகம்.104)
நவ்வி நாள்மறி கவ்வி (குறுந்.282)

விலங்கினைக் குறிக்கும் மா என்பது போல மான் என்பதும் பொதுப் பெயராகும். நவ்வி, உழை, புல்வாய் என்பன மானின் வகைகளாகும். எனவே அவை ஆடு, குதிரைகளை அடுத்து ஒருங்கே கூறப்பட்டன. இவற்றுள் விரைந்தோடுவது புல்வாய்; அசைந்து நடப்பது நவ்விமான்; துள்ளிச்செல்வது உழைமான். (12)

**குரங்கின் இளமைப்பெயர்**

**557. கோடுவாழ் குரங்கு குட்டியும் கூறுப.**

**(இ-ள்)** மரக்கிளைகளை வாழ்விடமாகக் கொண்டது குரங்கு. அதற்குரிய இளமைப்பெயரையும் குட்டி என்று கூறுவர் புலவர். (எ-டு)

குரங்கின் குட்டியும் குடாவடி உளியம் (சிலம்பு.25 : 50)

கோடுவாழ் குரங்கு என்பதனை ஊகமும் முசுவும் என இளம்பூரணர் குறிப்பிடுகிறார். (13)

**குரங்கிற்குரிய பிற இளமைப் பெயர்கள் (4)**

**558. மகவும்[1] பிள்ளையும்[2] பறழும்[3] பார்ப்பும்[4]
அவையும் அன்ன அப்பா லான.**

**(இ-ள்)** குரங்கினத்திற்கு முற்கூறப்பட்ட **குட்டி** என்னும் இளமைப் பெயரை ஒத்து **1.மக 2.பிள்ளை 3.பறழ் 4.பார்ப்பு** என்னும் பெயர்களும் உரியவை ஆகும். **(எ-டு)**

> உயர்கோட்டு **மகவுடை** மந்தி போல (குறுந்தொகை.29)
> **பார்ப்புடை** மந்திய மலைஇறந் தோரே (குறுந்.278) (14)

**கன்று என்னும் பெயர்க்குரியவை (5)**

**559. யானையும்[1] குதிரையும்[2] கழுதையும்[3] கடமையும்[4]
மானோடு[5] ஐந்தும் கன்றுஎனற்கு உரிய.**

**(இ-ள்) 1.யானை 2.குதிரை 3.கழுதை 4.கடமை (காட்டுப்பசு) 5.மான்** என்னும் விலங்கினங்கள் ஐந்து. அவையனைத்தும் **கன்று** என்னும் இளமைப் பெயரால் குறிப்பதற்கு உரியவை ஆகும். **(எ-டு)**

> **கன்றுடை** வேழம் (நற்றிணை.85) (15)

**கன்று - சிறப்பு விதி**

**560. எருமையும்[1] மரையும்[2] வரையார் ஆண்டே.**

**(இ-ள்)** **கன்று** என்னும் இளமைப் பெயர் **1.எருமை 2.மரை (மான்வகை)** என்னும் விலங்குகளுக்கும் பொருந்தி வரும் என்பதை நீக்காமல் ஏற்றுக்கொள்வர். **(எ-டு)**

> கருந்தாள் **எருமைக் கன்று** வெரூஉம் (நற்.97)
> **கன்றுடை மரைஆ** துஞ்சும் (குறுந்.115) (16)

**கவரி, கராகத்திற்குரிய இளமைப்பெயர்**

**561. கவரியும்[1] கராகமும்[2] நிகர்அவற்று உள்ளே.**

**(இ-ள்) 1.கவரிமா (நெடுமயிர் விலங்கு) 2.கராகம் (கரடி)** ஆகிய இரண்டும் முற்கூறப்பட்ட விலங்கினங்களுக்கு நிகராகக் **கன்று** என்னும் இளமைப் பெயரைப் பெறுதற்கு உரியவை ஆகும்.

கவரிமா - மயிர்த்திரளை மிகுதியாக உடைய ஒரு விலங்கு வகை. **(எ-டு)**

> மயிர்நீப்பின் வாழாக் **கவரிமா** அன்னார்
> உயிர்நீப்பர் மானம் வரின். (குறள். 969) (17)

**ஒட்டகத்திற்குரிய இளமைப் பெயர்**

**562. ஒட்டகம் அவற்றோடு ஒருவழி நிலையும்.**

**(இ-ள்)** முற்கூறப்பட்ட விலங்கினங்களோடு பொருந்தி நின்று **ஒட்டகமும் கன்று** என்னும் இளமைப் பெயரைப் பெறுவதற்கு உரியதாய் அமையும். *(18)*

**யானையின் இளமைப் பெயர்**

**563. குஞ்சரம் பெறுமே குழவிப் பெயர்க்கொடை.**

**(இ-ள்)** **குழவி** என்னும் இளமைப் பெயர் கொடுத்து அழைத்தலை **குஞ்சரம்** என்னும் வேறுபெயர் கொண்ட **யானையும்** பெறும்.

குஞ்சரம் - கரிய நிறத்தை உடைய யானை.

**(எ-டு)** கயந்தலை மடப்பிடி .... செவ்வாய்க் **குழவி** (அகம்.165) *(19)*

**பசு, எருமைக்குரிய இளமைப் பெயர்**

**564. ஆவும்[1] எருமையும்[2] அதுசொலப் படுமே.**

**(இ-ள்)** யானைக்கு உரியதைப் போலவே **1.ஆ (பசு) 2.எருமை** என்னும் இரண்டற்கும் **குழவி** என்னும் இளமைப்பெயர் சொல்லப்படுவதாகும்.

**(எ-டு)** பல் ஆ .... மடக்கண் **குழவி** (குறுந்.64)

மோட்டெருமை முழுக்**குழவி** (பட்டினப்பாலை.14) *(20)*

**கடமை, மரைக்குரிய இளமைப் பெயர்**

**565. கடமையும்[1] மரையும்[2] முதல்நிலை ஒன்றும்.**

**(இ-ள்)** முதலில் யானைக்குக் கூறப்பட்டதைப் போலவே **குழவி** என்னும் இளமைப் பெயர் **1.கடமை 2.மரை** என்னும் இரண்டற்கும் பொருந்தி வரும். *(21)*

**குழவி என்னும் பெயர் பெறுபவை (3)**

**566. குரங்கும்[1] முசுவும்[2] ஊகமும்[3] மூன்றும்**
**நிரம்ப நாடின் அப்பெயர்க்கு உரிய.**

**(இ-ள்)** **1.குரங்கு 2.முசு 3.ஊகம்** என்பன மூன்றும் குரங்கினத்தின் வகைகளாகும். முழுமையாக ஆராய்ந்து பார்க்கும் நிலையில் இம்மூன்றற்கும் **குழவி** என்னும் இளமைப் பெயர் உரியதாகும். *(22)*

**மக்களுக்குரிய இளமைப்பெயர் (2)**

**567. குழவியும்[1] மகவும்[2] ஆயிரண்டு அல்லவை**
**கிழவ அல்ல மக்கள் கண்ணே.**

(இ-ள்) 1.குழவி 2.மக என்கின்ற இரண்டும் இளமைப் பெயர்களாகும். அவ்விரண்டு பெயருமல்லாத பிறபெயர்கள் ஏழும் மக்களின் இளமைக்கு உரியவை அல்ல. (எ-டு)

மாசில் கற்பின் மடவோள் **குழவி** (நற்றிணை.15)

மான்தோல் பள்ளி **மக**வொடு .... எயிற்றி (பெரும்பாண்.89)

எனவே மக்கள் இளமைக்குரியவை குழவி, மக என்பனவாகும்.

**பிறவற்றிற்குரியவை:** பார்ப்பு, பறழ், குட்டி, குருளை, கன்று, பிள்ளை, மறி என்னும் ஏழுமாகும். (23)

**ஓரறிவு உயிர்க்குரிய இளமைப்பெயர் (4)**

**568. பிள்ளை[1] குழவி[2] கன்றே[3] போத்து[4] எனக்**
**கொள்ளவும் அமையும் ஓர்அறிவு உயிர்க்கே.**

(இ-ள்) 1.பிள்ளை 2.குழவி 3.கன்று 4.போத்து என்பன நான்கும் இளமைப் பெயர்களாகும். இவை நான்கும் ஓரறிவு உயிர்களாகிய புல், மரம் போன்றவற்றிற்குரிய பெயர்களாகவும் கொள்ளப்படும்.

கமுகம் பிள்ளை, தெங்கம் பிள்ளை; வீழில் தாழைக்குழவி (பெரும்பாண்.357) பூங்கன்று, போத்துக்கால். (24)

**நெல், புல்லுக்குப் பொருந்தாப் பெயர்கள்**

**569. நெல்லும்[1] புல்லும்[2] நேரார் ஆண்டே.**

(இ-ள்) 1.நெல் 2.புல் என்பவை ஓரறிவு உயிர்களாகும். இவற்றிற்கு மேற்சொல்லப்பட்ட **பிள்ளை, குழவி, கன்று, போத்து** என்னும் பெயர்கள் அமைவதை ஏற்றுக் கொள்ளமாட்டார். (25)

**இளமைப் பெயர்களின் வரையறை**

**570. சொல்லிய மரபின் இளமை தானே**
**சொல்லும் காலை அவைஅலது இலவே.**

(இ-ள்) மேல் இன்னின்ன உயிரினங்கள் இன்னின்ன வகை இளமைப் பெயர்களைப் பெற்றுவரும் மரபினை உடையன எனக் கூறப்பட்டது. இனிச் சொல்ல வேண்டிய மரபினை உடையவற்றிற்கும் இப்பெயர்களே அல்லாமல் வேறு இளமைப்பெயர்கள் இல்லை. (எ-டு)

பறவைதம் **பார்ப்பு**ள்ள (நெய்தற்கலி.2)
வெள்ளாங் குருகின் **பிள்ளை**யும் பலவே (குறுந்தொகை. 152)
யாமைப் **பார்ப்பி**ன் அன்ன (ஐங்குறுநூறு. 41)
தன்**பார்ப்பு**த் தின்னும் பண்பின் முதலை

என்பவற்றுள் பறவையினம், கொக்கு, ஆமை, முதலை ஆகியவற்றிற்குப் பார்ப்பு, பிள்ளை என்னும் இளமைப்பெயர்களே முற்கூறப்பட்ட மரபையொட்டி எடுத்தாளப்பட்டுள்ளன.

பார்ப்பு, பிள்ளை என்பவற்றுடன் பிறவும் பறப்பனவற்றிற்கும் ஊர்வனவற்றிற்கும் இளமைப்பெயர்களாக அமையும்.

ஒன்றற்குரியவற்றை மற்றொன்றிற்கு உரியதாக்கிக் கூறுவதும் சிறுபான்மை கொள்ளப்படும். **(எ-டு)**

**பிள்ளை வெருகிற்கு அல்கிரை யாகி** **(குறுந்தொகை.17)**

என்பதில் வெருகாகிய காட்டுப் பூனைக்குப் பிள்ளை என்னும் இளமைப்பெயர் அமைந்தது. சிங்கம் - புலியை ஒத்துப் பெயர்பெறும். உடும்பு, ஓந்தி, பல்லி போன்றவை அணிலை ஒத்துப் பெயர்பெறும். நாவி (புழுகுப் பூனை) - மூங்காவினை ஒத்துப் பெயர்பெறும் என விளக்குகிறார் இளம்பூரணர். (26)

## உயிர்ப் பொருள்களின் பாகுபாடுகள் (6)

571. **ஒன்றுஅறி வதுவே உற்றுஅறி வதுவே[1]**
**இரண்டுஅறி வதுவே அதனொடு நாவே[2]**
**மூன்றுஅறி வதுவே அவற்றொடு மூக்கே[3]**
**நான்குஅறி வதுவே அவற்றொடு கண்ணே[4]**
**ஐந்துஅறி வதுவே அவற்றொடு செவியே[5]**
**ஆறுஅறி வதுவே அவற்றொடு மனனே[6]**
**நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே.**

**[இ-ள்]** 1.உடம்பினால் **உற்றறிவன** (தொடு உணர்ச்சி) ஓரறிவு உயிர்களாகும் 2.உடம்பினால் உற்றறிவதோடு **வாயினால் சுவையினையும்** அறிபவை ஈரறிவு உயிர்களாகும் 3.உடம்பு, வாய் ஆகியவற்றோடு **மூக்கினால் மணத்தையும்** அறிபவை மூவறிவு உயிர்களாகும் 4.உடம்பு, வாய், மூக்கு ஆகியவற்றோடு **கண்ணினால் உருவத்தையும்** அறிபவை நான்கறிவு உயிர்களாகும் 5.முற்கூறிய உடம்பு, வாய், மூக்கு, கண் ஆகியவற்றோடு **செவியினால் ஓசையையும்** அறிபவை ஐயறிவு உயிர்களாகும் 6.முற்கூறிய மெய், வாய், மூக்கு, கண், செவி என்னும் ஐம்பொறிகளோடு **மனத்தாலும் அறிவன** ஆறறிவு உயிர்களாகும். இவ்வாறு உயிர்களின் அறிவுத் தகுதிக்கு ஏற்ப அவற்றை ஆராய்ந்து உணர்ந்தோர் ஆறாக முறைப்படுத்தினர்.

**உடம்பினால் உற்றறியப்படுபவை:** வெப்பம், தட்பம், வன்மை, மென்மை. **(எ-டு)** தாமரை, அல்லி, தொட்டாச் சிணுங்கிச் செடி, ....

**நாவினால் சுவைத்து அறியப்படுபவை:** கைப்பு (கசப்பு), காழ்ப்பு (காரம்), துவர்ப்பு, உவர்ப்பு, புளிப்பு, மதுரம் (இனிப்பு).

**மூக்கினால் மோந்து அறியப்படுபவை:** நன்னாற்றம், தீய நாற்றம்.

**கண்ணினால் கண்டு அறியப்படுபவை:** வெண்மை, செம்மை, பொன்மை, பசுமை, கருமை, நெடுமை, குறுமை, பருமை, நேர்மை, வட்டம், கோணம், சதுரம்.

**செவியினால் கேட்டு அறியப்படுபவை:** ஓசை வேறுபாடு, சொற்படும் பொருள். (எ-டு) நாய் - செவியால் பேச்சை உணர்தல்.

**மனத்தினால் உணர்ந்து அறியப்படுவது:** இது போல்வன வேண்டும் எனவும் இது செயல் வேண்டும் எனவும் இஃது எத்தன்மை எனவும் அனுமானித்தல் என்பர் இளம்பூரணர். நெருப்பு உள்ளதைக் கண்ணால் காணாத நிலையிலும் புகையைக் கண்டு நெருப்பு உண்டு என அறிவது கருதலளவை ஆகும். இது மனத்தால் உணரப்படும் ஆற்றல். இதனை வடநூலார் **அனுமானப் பிரமாணம்** என்று கூறுவர். (27)

**ஓரறிவு உயிர்கள்**

**572. புல்லும்[1] மரனும்[2] ஓர்அறி வினவே**
**பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே.**

**(இ-ள்)** 1.புல் 2.மரம் என்பன உடம்பினால் அறியும் **ஓரறிவு உயிர்களாகும்**. இவற்றைப் போலவே அப்பிரிவைச் சார்ந்து வேறு பிற உயிரினங்களும் உள்ளன. பிறஆவன : கொட்டி, தாமரை, கழுநீர்.

**புல்:** வெளிப்புறம் வலிமை செறிந்தது ; **மரம்:** உட்புறம் வயிரம் பாய்ந்தது. ஓரறிவு உயிர் - உடம்பினால் (தொடு உணர்வு) அறிபவை. (28)

**ஈரறிவு உயிர்கள்**

**573. நந்தும்[1] முரளும்[2] ஈர்அறி வினவே**
**பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே.**

**(இ-ள்)** 1.நந்து (நத்தை) 2.முரள் (இப்பி) என்பன **ஈரறிவு உயிர்களாகும்**. இவற்றைப் போலவே அப்பிரிவைச் சார்ந்து வேறு பிற உயிரினங்களும் உள்ளன.

**நந்து** என்றதனால் **சங்கு, நத்தை, அலகு, நொள்ளை** என்பனவும் **முரள்** என்றதனால் **இப்பி, கிளிஞ்சல், ஏரல்** என்பனவும் ஈரறிவு உயிர்கள் என்கிறார் இளம்பூரணர்.

ஈரறிவு உயிர் - உடம்பாலும் வாயினாலும் (சுவை) அறிபவை. (29)

**மூவறிவு உயிர்கள்**

**574. சிதலும்[1] எறும்பும்[2] மூஅறி வினவே**
**பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே.**

**(இ-ள்)** 1.சிதல் (கறையான்) 2.எறும்பு என்பன **மூவறிவு உயிர்களாகும்**. இவற்றைப் போலவே அப்பிரிவைச் சார்ந்து வேறு பிற உயிரினங்களும் உள்ளன.

பிற என்றதனால் அட்டை, ஈயல், மூதா போன்றவையும் மூவறிவு உயிர்களாகும்.

மூவறிவு உயிர் - உடம்பாலும் வாயினாலும் மூக்கினாலும் (மணம்) அறிபவை. (30)

**நான்கறிவு உயிர்கள்**

**575. வண்டும்[1] தும்பியும்[2] நான்குஅறி வினவே**
**பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே.**

**(இ-ள்) 1.வண்டு 2.தும்பி** என்பன **நான்கறிவு உயிர்**களாகும். இவற்றைப் போலவே அப்பிரிவைச் சார்ந்து வேறு பிற உயிரினங்களும் உள்ளன.

பிறவும் என்றதனால் **ஞிமிறு, சுரும்பு** போன்றவையும் நான்கறிவு உயிர்களாகக் கொள்ளப்படும்.

நான்கறிவு உயிர் - உடம்பு, வாய், மூக்கு, கண் (காணுதல்) ஆகியவற்றால் அறிபவை. (31)

**ஐந்தறிவு உயிர்கள்**

**576. மாவும்[1] புள்ளும்[2] ஐஅறி வினவே**
**பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே.**

**(இ-ள்) 1.மா** (நான்கு கால்களைக் கொண்ட விலங்கு) **2.புள்** (பறவை) என்பன **ஐயறிவு உயிர்**களாகும். இவற்றைப் போலவே அப்பிரிவைச் சார்ந்து வேறு பிற உயிரினங்களும் உள்ளன.

**பிறவாவன:** தவழ்வனவற்றுள் **பாம்பு** முதலாயினவும் நீரில் வாழ்வனவற்றுள் **மீன், முதலை, ஆமை** போன்றவையும் ஐயறிவு உயிர்களுள் அடங்கும்.

ஐந்தறிவு உயிர் - உடம்பு, வாய், மூக்கு, கண், செவி (கேட்டல்) ஆகியவற்றால் அறிபவை. (32)

**ஆறறிவு உயிர்கள்**

**577. மக்கள் தாமே ஆறுஅறி உயிரே**
**பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே.**

**(இ-ள்) மக்கள் ஆறறிவு உயிர்** எனப்படுவர். இவர்களை ஒப்ப இப்பிரிவில் வேறு பிறவும் அடங்குவனவாகும்.

பிறவாவன: **தேவர், அசுரர், இயக்கர்** முதலாயினோரும் ஆறறிவு உயிருள் அடங்குவர் என்பர் இளம்பூரணர்.

ஆறறிவு உயிர் - உடம்பு முதலிய ஐம்பொறிகளோடு மனவுணர்வையும் கொண்டிருத்தல். (33)

**ஆறறிவு உயிர் - சிறப்பு விதி**

578. **ஒருசார் விலங்கும் உளஎன மொழிப.**

**(இ-ள்)** ஆறறிவைக் கொண்ட விலங்குகளும் உள்ளன என்று சொல்லுவர் புலவர். அவையாவன : **கிளி, குரங்கு, யானை** போன்றவை ஆறாம் அறிவாகிய மனஉணர்வை (பகுத்தறிவை) உடையன. *(34)*

## II. ஆண்பாற் பெயர்கள்

**வேழம் - களிறு**

579. **வேழக்கு உரித்தே விதந்துகளிறு என்றல்.**

**(இ-ள்)** **வேழம்** என்னும் வேறுபெயருடையது **ஆண் யானை.** அதற்குக் **களிறு** என்னும் பெயர் சிறப்பித்துக் கூறப்படுவதாகும். **(எ-டு)**

புகர்முகக் **களிறொடு** புலிபொருது *(கலி.44)* *(35)*

**கேழல் (பன்றி) - களிறு**

580. **கேழல் கண்ணும் கடிவரை இன்றே.**

**(இ-ள்)** **கேழல்** என்னும் வேறுபெயரினை உடையது **பன்றி** ஆகும். அவ்வினத்தின் ஆண்பாலுக்கும் ஆண்யானையைக் குறிக்கும் **களிறு** என்னும் பெயர் நீக்கப்படுவதில்லை. **(எ-டு)**

**களிற்றுக்** கோட்டன்ன வாலெயிறு *(புறம்.371)* *(36)*

**ஒருத்தல் என்னும் பெயர்க்குரியவை (6 + 2 + 1 = 9)**

581. **புல்வாய்[1] புலி[2] உழை[3] மரையே[4] கவரி[5]**
**சொல்லிய கராமொடு[6] ஒருத்தல் ஒன்றும்.**

**(இ-ள்)** **1.புல்வாய் 2.புலி 3.உழை 4.மரை 5.கவரி** என்று சொல்லியவற்றோடு **6.கராம்** என்னும் முதலைக்கும் **ஒருத்தல்** என்னும் ஆண்பாற் பெயர் பொருந்தி வரும். **(எ-டு)**

செந்நாய் வெரீஇய புகர்உழை **ஒருத்தல்** *(அகம்.219)* *(37)*

**ஒருத்தல் - யானை, பன்றி**

582. **வார்கோட்டு யானையும் பன்றியும் அன்ன.**

**(இ-ள்)** நீண்ட கொம்பினை உடையதாகிய **யானை, பன்றி** ஆகிய இனத்தின் ஆண்பால் முற்கூறப்பட்டதைப் போல் **ஒருத்தல்** என்னும் பெயரைப் பெறும். **(எ-டு)**

*யானை* - ஓமை குத்திய உயர்கோட்டு **ஒருத்தல்** *(குறுந்.396)* *(38)*

**ஒருத்தல் - எருமை**

**583. ஏற்புடைத்து என்ப எருமைக் கண்ணும்.**

**(இ-ள்)** எருமை இனத்துள் ஆண்பாலுக்கும் முற்கூறப்பட்ட **ஒருத்தல்** என்னும் பெயர் ஏற்புடையதாகும் என்று சொல்லுவர் புலவர். **(எ-டு)**

செங்கண் எருமை இனம்பிரி **ஒருத்தல்** *(மலைபடு.472)* *(39)*

**ஏறு என்னும் பெயர் பெறுபவை (4+3+1=8)**

**584. பன்றி[1] புல்வாய்[2] உழையே[3] கவரி[4]**
**என்றுஇவை நான்கும் ஏறுஎனற்கு உரிய.**

**(இ-ள்)** **1.பன்றி 2,புல்வாய் 3.உழை 4.கவரி** என்னும் நான்கு இனத்தைச் சார்ந்த ஆண்பாலுக்கும் **ஏறு** என்னும் பெயர் உரியதாகும். **(எ-டு)**

**மான் ஏறு** மடப்பிள்ளை தழீஇ *(குறுந்.319)* *(40)*

**ஏறு - எருமை, மரை, பெற்றம்**

**585. எருமையும்[1] மரையும்[2] பெற்றமும்[3] அன்ன.**

**(இ-ள்)** **1.எருமை 2.மரை 3.பெற்றம்** ஆகிய மூன்று இனங்களுக்கும் உரிய ஆண்பாற் பெயர் முற்கூறப்பட்டதை ஒத்து **ஏறு** என அமையும். பெற்றம் - பசு இனத்தின் பொதுப்பெயர். *(41)*

**ஏறு - சுறா**

**586. கடல்வாழ் சுறவும் ஏறுஎனப் படுமே.**

**(இ-ள்)** கடல் நீரை வாழ்விடமாகக் கொண்டது **சுறாமீன்.** இவ்இனத்தின் ஆணினம் **ஏறு** என்னும் பெயரால் அழைக்கப்படும். **(எ-டு)**

கொல்**லேற்றுச் சுற**வினம் *(கலி.123)* *(42)*

**போத்து என்னும் பெயர் பெறுபவை (5+1+2=8)**

**587. பெற்றம்[1] எருமை[2] புலி[3]மரை[4] புல்வாய்[5]**
**மற்றுஇவை எல்லாம் போத்துஎனப் படுமே.**

**(இ-ள்)** **1.பெற்றம் 2.எருமை 3.புலி 4.மரை 5.புல்வாய்** என்பவற்றின் ஆண்பால் **போத்து** என்னும் பெயரால் வழங்கப்படும். **(எ-டு)**

**எருமைப்** பிறழ்சுவல் இரும்**போத்து** *(நற்றிணை.330)*

இரும்**புலிப்** புகர்ப்**போத்து** *(புறம்.157)* *(43)*

**போத்து - நீர் வாழ்பவை**

**588. நீர்வாழ் சாதியும் அதுபெறற்கு உரிய.**

**(இ-ள்)** நன்னீர், கடல்நீர் என்னும் இருநீரிலும் வாழ்பவை **முதலை** முதலானவையாகும். அவற்றின் ஆண்பால் **போத்து** என்னும் பெயரால் குறிப்பதற்கும் உரியவை ஆகும். *(44)*

**போத்து – மயில், எழாஅல்**

589. **மயிலும்[1] எழாஅலும்[2] பயிலத் தோன்றும்.**

**(இ-ள்)** 1.மயில் 2.எழாஅல் (வல்லூறு) என்பவை பறவை இனங்கள். இவற்றின் ஆணிற்குப் **போத்து** என்னும் பெயர் மிகுதியாக வழங்கப்படும். (45)

**இரலை, கலை – புல்வாய்**

590. **இரலையும்[1] கலையும்[2] புல்வாய்க்கு உரிய.**

**(இ-ள்)** ஒருவகை மானினம் **புல்வாய்** என்னும் பெயரால் அழைக்கப்படும். அவ்வினத்துள் ஆணிற்கு **1.இரலை 2.கலை** என்னும் பெயர்கள் உரியவையாகும். **(எ-டு)**

உதிர்நெல் நோக்கிக் **கலை** பிணை விளிக்கும் (அகம்.129)
திரிமருப்பு **இரலை**யொடு மடமான் (முல்லை.99) (46)

**கலை – உழைமான், முசு**

591. **கலைஎன் காட்சி உழைக்கும் உரித்தே**
**நிலையிற்று அப்பெயர் முசுவின் கண்ணும்.**

**(இ-ள்) கலை** என்னும் பெயர் மான் வகையுள் ஒன்றாகிய **உழை**யின் ஆண்பாலுக்கும் உரியதாகி வரும். குரங்கின் வகையாகிய **முசு** இனத்தின் ஆண்பாற்கும் கலை என்பது நிலைபெற்ற பெயராகும். **(எ-டு)**

மைப்பட் டன்ன மாமுக **முசுக்கலை** (குறுந்.121) (47)

**ஆட்டிற்குரிய ஆண்பாற் பெயர்கள் (4)**

592. **மோத்தையும்[1] தகரும்[2] உதளும்[3] அப்பரும்[4]**
**யாத்த என்ப யாட்டின் கண்ணே.**

**(இ-ள்)** ஆட்டு இனத்தின் ஆண்பாலுக்கு **1.மோத்தை 2.தகர் 3.உதள் 4.அப்பர்** என்னும் பெயர்கள் திண்மையுறப் பொருந்தி வரும் எனச் சொல்லுவர் புலவர். **(எ-டு)**

வெள்யாட்டு **மோத்தை** (பேராசிரியர்)
வார்கோட்டு வயர்**தகர்** (ஐங்குறு.238)
**உதள்** நெடுந்தாம்பு தொடுத்த ...முன்றில் (பெரும்பாண்.151)

அப்பர் என்னும் பெயர் இக்காலத்தில் வழக்கு இழந்தது போலும். யாத்த என்றதனால் கடா என்பது ஆட்டிற்குப் பெயராகக் கொள்க. இனிக் குரங்கினை அப்பர் என்றலும் கொள்க என விளக்கம் தருகிறார் பேராசிரியர். (48)

**பறவைக்குரிய ஆண்பாற்பெயர் - சேவல்**

**593. சேவல் பெயர்க்கொடை சிறகொடு சிவணும்
மாயிரும் தூவி மயில்அலங் கடையே.**

**(இ-ள்)** சிறகினை உடைய **பறவைகள்** அனைத்திற்கும் உரிய ஆண்பாலுக்குச் **சேவல்** என்னும் பெயர்கொடுத்து வழங்குதல் பொருந்தும். அழகிய தோகையைக் கொண்ட மயிலினத்தின் ஆணிற்கு மட்டும் அப்பெயர் பொருந்தாது. **(எ-டு)**

எருவைச் **சேவல்** (நற்றிணை.298)
கம்புட் **சேவல்** (மதுரை.254)
கானங் கோழிக் கவர்குரல் **சேவல்** (புறம்.242)
செம்பூழ்ச் **சேவல்** (அகம்.63)

மயிலினத்தின்ஆண், தோகையைப் பெற்றுப் பெண்பாலைப் போலும் சாயலைக் கொண்டு திகழும். எனவே அதற்கு ஆண்பால் தன்மை இல்லை. ஆயினும் செவ்வேளாகிய முருகன் ஏறி வரும் ஆண்மயிலுக்குச் சேவல் என்னும் பெயர் பொருந்தும் என்கிறார் பேராசிரியர். (49)

**ஆண்பாற் பொதுப்பெயர் - ஏற்றை**

**594. ஆற்றலொடு புணர்ந்த ஆண்பாற்கு எல்லாம்
ஏற்றைக் கிளவி உரித்துஎன மொழிப.**

**(இ-ள்)** வலிமை பொருந்தியதாய்க் காணப்படுவன **ஆண்பால் உயிரினங்கள்.** அவை அனைத்திற்கும் **ஏற்றை** என்னும் பெயர் உரியது என்று சொல்லுவர் புலவர். **(எ-டு)**

குறுங்கை **இரும்புலிக்** கோள்வல் **ஏற்றை** (நற்றிணை.36)
**செந்நாய் ஏற்றை** (அகம்.21) **முளவுமான் ஏற்றை** (நற்றிணை.285)
**முதலைக்** கோள்வல் **ஏற்றை** (குறுந்.324)
**எகினத்** தூநிற **ஏற்றை** (நெடு.91)
**நந்தின்** சுரிமுக **ஏற்றை** (புறம்.266) (50)

**ஆண்பால், பெண்பால் பொதுப்பெயர்**

**595. ஆண்பால் எல்லாம் ஆண்எனற்கு உரிய
பெண்பால் எல்லாம் பெண்எனற்கு உரிய
காண்பவை அவைஅவை அப்பா லான.**

**(இ-ள்)** கண்ணால் காணப்படும் உயிரினங்களுள் ஆண்பால் அனைத்தும் ஆண் என்னும் சொல்லால் குறிக்கப்படும். பெண்பால் அனைத்தும் பெண் என்னும் சொல்லால் பெயர் பெறும். அவ்விரு பாலுக்கும் உரிய அறிகுறிகள் உடலமைப்பாலும் செயலாலும் வேறுபடும் நிலையில் அமையும். (51)

# III. பெண்பாற் பெயர்கள்

**பெண்யானை – பிடி**

596. **பிடிஎன் பெண்பெயர் யானை மேற்றே.**

**(இ-ள்)** பிடி என்னும் பெயர் யானை இனத்துள் பெண்பாலுக்கு உரியதாகும். **(எ-டு)**

படுகடுங் களிற்றின் ..... பிடிபடி முறுக்கிய *(அகம்.8)* *(52)*

**பெட்டை என்னும் பெயர் பெறுபவை (4)**

597. **ஒட்டகம்[1] குதிரை[2] கழுதை[3] மரை[4] இவை**
**பெட்டை என்னும் பெயர்க்கொடைக்கு உரிய.**

**(இ-ள்)** பெட்டை என்னும் பெயர் **1.ஒட்டகம் 2.குதிரை 3.கழுதை 4.மரை** என்னும் நான்கு இன விலங்குகளுக்கும் உரிய பெண்பாற் பெயராக வழங்கப்படும்.

ஒட்டகப்பெட்டை, குதிரைப்பெட்டை. *(53)*

**பெண்பாற் பறவை – பெட்டை**

598. **புள்ளும் உரிய அப்பெயர்க்கு என்ப.**

**(இ-ள்)** மேற்கூறப்பட்ட பெட்டை என்னும் பெண்பாற் பெயர் பறவையினத்திற்கும் உரியது என்று சொல்லுவர் புலவர்.

கோழிப்பெட்டை, மயிற்பெட்டை. *(54)*

**பெண்பாற் பறவை – பேடை, பெடை**

599. **பேடையும்[1] பெடையும்[2] நாடின் ஒன்றும்.**

**(இ-ள்)** 1.பேடை 2.பெடை என்பன இரண்டும் பெண்பாலைக் குறிக்கும் சொற்களாகும். இவற்றை ஆராய்ந்து அறியும் நிலையில் அவை பெட்டை என்னும் சொல்லொடு பொருந்தி வரும்.

செங்காற் பேடை *(குறுந்.151)* இரும்புறாப்பெடை *(அகம்.301)*

பறவைக்கு உரிய விதியினை அடுத்து வைத்தமையால் இவ்விரு பெயர்களும் பெரும்பான்மையும் பறவைகளுக்குப் பின்வரும்.

குயிற்பேடை, அன்னப் பேடை. *(55)*

**கோழி, கூகை – அளகு**

600. **கோழி[1] கூகை[2] ஆயிரண்டு அல்லவை**
**சூழும் காலை அளகுஎனல் அமையா.**

**(இ-ள்)** **1.கோழி 2.கூகை** என்னும் இரண்டும் பறவை இனங்களாகும். ஆராய்ந்து பார்க்கும் நிலையில் இவ்விரண்டைத் தவிர மற்றப் பறவைகளுக்கு **அளகு** என்னும் பெண்பாற் பெயர் அமைவதில்லை.

**(எ-டு)** மனைவாழ் **அளகு** (பெரும்பாண்.256)

பறவை இனத்தில் கோழி, கூகை என்னும் இரண்டு மட்டுமே அளகு என்னும் பெண்பாற் பெயரைப்பெறும். (56)

**மயில் - அளகு**

**601. பெண்பா லான**
**அப்பெயர்க் கிழமை மயிற்கும் உரித்தே.**

**(இ-ள்)** பறவையுள் பெண்பாலுக்குரிய சிறுபான்மைப் பெயராகிய **அளகு** என்பது **பெண்மயிலுக்கும்** உரியதாய் வரும்.

இவ்விரு நூற்பாக்களிலிருந்து அளகு என்னும் பெண்பாற் பெயர் கோழி, கூகை, மயில் என்னும் மூன்றற்கு மட்டுமே வரும் என்பது தெளிவாகிறது. (57)

**பிணை என்னும் பெயர்க்குரியவை (4)**

**602. புல்வாய்[1] நவ்வி[2] உழையே[3] கவரி[4]**
**சொல்வாய் நாடின் பிணைஎனப் படுமே.**

**(இ-ள்)** **1.புல்வாய் 2.நவ்வி 3.உழை 4.கவரி** ஆகியவை நான்கும் விலங்கினங்களாகும். அவற்றிற்குச் சொல்லுகின்ற பெண்பாற் பெயரை ஆராய்ந்தால் அவை **பிணை** என்னும் பெயரால் அழைக்கப்படும். **(எ-டு)**

கலை**பிணை** விளிக்கும் கானம் (அகம்.129)
நவ்விப் பெருங்கண் மாப்**பிணை** (புறம்.2)
கவரி மான்**பிணை** (பதிற்றுப்பத்து.11) (58)

**பிணவு என்னும் பெயர்க்குரியவை (3)**

**603. பன்றி[1] புல்வாய்[2] நாய்[3]என மூன்றும்**
**ஒன்றிய என்ப பிணவுஎன் பெயர்க்கொடை.**

**(இ-ள்)** **1.பன்றி 2.புல்வாய் 3.நாய்** என்பன மூன்றும் நாற்கால் விலங்கினங்களாகும். இவற்றின் பெண்பாலுக்குப் பொருத்தமுற அமைந்த **பிணவு** என்னும் பெயரைக் கொடுத்து அழைப்பர் என்று சொல்லுவர் புலவர். **(எ-டு)**

கேழல் குறுந்தாள் **பிணவு** (பேராசிரியர்)
நாய்ப்**பிண வொடு** ஒடுங்கிய (பேராசிரியர்) (59)

**பிணவல் என்னும் பெயர்க்குரியவை**

604. **பிணவல் எனினும் அவற்றின் மேற்றே.**

**(இ-ள்)** மேற்கூறப்பட்ட பன்றி, புல்வாய், நாய் ஆகிய மூன்றற்கும் பெண்பாற் பெயராகப் **பிணவல்** என்பதும் பொருந்தி வரும். **(எ-டு)**

பன்றி தோல்முலைப் **பிணவொடு** (நற்றிணை.336)
செந்நாய் வயவுறு **பிணவு** (ஐங்குறு.323) (60)

**'ஆ' என்னும் பெண்பாற் பெயர்க்குரியவை (3)**

605. **பெற்றமும்[1] எருமையும்[2] மரையும்[3] ஆவே.**

**(இ-ள்)** 1.பெற்றம் 2.எருமை 3.மரை ஆகிய மூன்றற்கும் உரிய பெண்பாற் பெயர் **ஆ** என்னும் ஓரெழுத்து ஒருமொழிப் பெயராகும்.

**(எ-டு)** புனிற்றாப் பாய்ந்தென (அகம்.58) செங்கண் **காரான்** (அகம்.46)
மரை **ஆ** (கலி.6) (61)

**உயர்திணைப் பெண்பாலுக்கு உரிய பெயர்கள் (2)**

606. **பெண்ணும்[1] பிணவும்[2] மக்கட்கு உரிய.**

**(இ-ள்)** உயர்திணையாகிய மக்கள் இனத்தின் பெண்பாலுக்கு உரிய பெயர் **1.பெண் 2.பிணவு** என்பனவாகும். **(எ-டு)**

**பெண்**கோள் ஒழுக்கம் (அகம்.112) (62)

**நாகு என்னும் பெண்பாற் பெயர்க்குரியவை (3)**

607. **எருமையும்[1] மரையும்[2] பெற்றமும்[3] நாகே.**

**(இ-ள்)** முன்னர் ஆ என்னும் பெண்பாற்பெயர்க்கு உரியவையாய்க் கூறப்பட்டவை மூன்று. அவை **1.எருமை 2. மரை 3. பெற்றம்** என்பன. அவற்றிற்கு ஆ என்பதோடு **நாகு** என்னும் பெயரும் உரியதாய் வரும்.

**(எ-டு)** மடக்கண் **எருமை** மாண்**நாகு** தழீஇ (அகம்.146) (63)

**நந்தின் பெண்பாற் பெயர்**

608. **நீர்வாழ் சாதியுள் நந்தும் நாகே.**

**(இ-ள்)** முன்னர் ஈரறிவு உயிராகக் குறிக்கப்பட்டது **நந்து** ஆகும். இது நீரில் வாழும் இனங்களுள் ஒன்று. இதன் பெண்பாற் பெயர் **நாகு** என்பதாகும். **(எ-டு)**

**நாகி**ள வளையொடு பகன்மணம் புகூஉம் (புறம்.266) (64)

**ஆட்டின் பெண்பாற் பெயர் (2)**

609. **மூடும்[1] கடமையும்[2] யாடுஅல பெறாஅ.**

**(இ-ள்)** **1.மூடு 2.கடமை** என்னும் இரண்டும் பெண்பாற் பெயர்கள். இவை **ஆடு நீங்கிய** பிற பெண்பால் விலங்குகளுக்குப் பொருந்துவதில்லை.

ஆட்டின் பெண்ணினத்திற்கு மட்டுமே மூடு, கடமை என்னும் இரண்டும் பெயர்களாக வரும். (65)

**பாட்டி என்னும் பெயர்க்குரியவை (2+1)**

610. **பாட்டி என்ப பன்றியும்[1] நாயும்[2].**

**(இ-ள்)** **1.பன்றி 2.நாய்** என்பவற்றின் பெண்பாற் பெயரைப் **பாட்டி** என்று சொல்லுவர் புலவர். (66)

**பாட்டி - நரி**

611. **நரியும் அற்றே நாடினர் கொளினே.**

**(இ-ள்)** பாட்டி என்னும் பெண்பாற் பெயர்ச்சொல் ஆராய்ந்து பார்க்குமிடத்து **நரிக்கும்** உரியதாய் வரும். (67)

**மந்தி என்னும் பெயர்க்குரியவை (3)**

612. **குரங்கும்[1] முசுவும்[2] ஊகமும்[3] மந்தி.**

**(இ-ள்)** **1.குரங்கு 2.முசு 3.ஊகம்** என்பன மூன்றும் குரங்கினத்தின் வகைகளாகும். இவற்றிற்குரிய பெண்பாற் பெயர் **மந்தி** என்பதாகும்.
**(எ-டு)** பைங்கண் **மந்தி** பார்ப்பொடு கவரும் (குறுந்.278) (68)

**பெயர்களுக்குப் புறனடை - வழுவமைதி**

613. **குரங்கினுள் ஏற்றைக் கடுவன் என்றலும்[1]**
**மரம்பயில் கூகையைக் கோட்டான் என்றலும்[2]**
**செவ்வாய்க் கிள்ளையைத் தத்தை என்றலும்[3]**
**வெவ்வாய் வெருகினைப் பூசை என்றலும்[4]**
**குதிரையுள் ஆணினைச் சேவல் என்றலும்[5]**
**இருள்நிறப் பன்றியை ஏனம் என்றலும்[6]**
**எருமையுள் ஆணினைக் கண்டி என்றலும்[7]**
**முடிய வந்த வழக்கின் உண்மையின்**
**கடியல் ஆகா கடன்அறிந் தோர்க்கே.**

**(இ-ள்)** *1.குரங்கினுள் ஆண்பாலாகக் குறிக்கப்படும்* **ஏற்றைக் கடுவன்** என்னும் பெயராலும் வழங்குவர் 2.மரத்தில் வாழ்கின்ற **கூகையைக் கோட்டான்** என்னும் பெயராலும் அழைப்பர்.

3.சிவந்த வாயினை உடைய **கிள்ளையைத் (கிளியைத்) தத்தை** என்றும் கூறுவர் 4.கொடுமையான வாயினை உடைய **வெருகினைப் (காட்டுப்பூனையைப்) பூசை** என்ற பெயராலும் குறிப்பிடுவர் 5.**குதிரை** இனத்துள் ஆண்பாலைச் **சேவல்** எனவும் சுட்டுவர் 6.இருள் போன்ற கரிய நிறமுடைய **பன்றியை ஏனம்** என்னும் பெயர்கொடுத்தும் வழங்குவர் 7.**எருமை** இனத்துள் **ஆணினைக் கண்டி** என்னும் பெயராலும் அழைப்பர். இவ்வாறு கூறப்படும் உலகத்தார் வழக்குகள் மருவி வந்த வழக்குகளாகும். உலக வழக்கிலும் செய்யுள் வழக்கிலும் மாறுபட்டு வரும் இப்பெயர்களை வழு என்று நீக்காமல் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

**(எ-டு)** **கடுவனும்** அறியும் அக்கொடி யோனை (குறுந்.26)
தார்**த்தை** வாய்மொழியும் தண்கயத்து (திணை.நூற்றைம்பது.73)
வளைமருப்பு **ஏனம்** (பெரும்பாண்.110) (69)

### பொதுப்பெயர்கள்

614. **பெண்ணும் ஆணும் பிள்ளையும் அவையே.**

**(இ-ள்)** இவ்வாறாக மேல் கூறப்பட்ட பெயர்கள் பல. அவை அனைத்தும் ஆண்பால், பெண்பால், இளமை என்னும் மூன்றற்கும் உரிய பெயர்கள் ஆகும். (70)

## நால்வகை வருண மரபுகள்

### அந்தணர்க்கு உரிய பொருள் மரபுகள் (4)

615. **நூலே[1] கரகம்[2] முக்கோல்[3] மணையே[4]**
**ஆயும் காலை அந்தணர்க்கு உரிய.**

**(இ-ள்)** 1.மார்பில் அணியும் முப்புரி நூல் (பூநூல்) 2.கரகம் (கமண்டலம்) 3.முக்கோல் 4.ஆமை வடிவில் அமைந்த இருக்கைப் பலகை என்பவை நான்கும் ஆராயும்காலத்து அந்தணர்க்கு உரிய பொருள்களாகும். **(எ-டு)**

உறித்தாழ்ந்த **கரகமும்** உரைசான்ற **முக்கோலும்**
நெறிப்படச் சுவல்அசைஇ .... அந்தணீர் (கலி.9) (71)

### அரசர்க்கு உரிய பொருள் மரபுகள் (10)

616. **படையும்[1] கொடியும்[2] குடையும்[3] முரசும்[4]**
**நடைநவில் புரவியும்[5] களிறும்[6] தேரும்[7]**
**தாரும்[8] முடியும்[9] நேர்வன பிறவும்**
**தெரிவுகொள் செங்கோல்[10] அரசர்க்கு உரிய.**

**(இ-ள்)** 1.படை (படைக்கருவி) 2.கொடி 3.குடை (வெண்கொற்றக் குடை) 4.முரசு (அரச முரசம்) 5.சிறந்த நடையை உடைய குதிரை 6.யானை 7.தேர் 8.மாலை 9.மணிமுடி என்பவற்றோடு 10.ஆராய்ந்து கொள்ளப்பட்ட செங்கோல் ஆகியவையும் பிறவும் அரசர்க்குரிய பொருள்களாகும்.

பிற என்பதற்கு **ஆரம்** (மணிமாலை), **வீரக்கழல்** ஆகிய இரண்டையும் இளம்பூரணரும் **கவரி, அரியணை, அரண்** ஆகிய மூன்றையும் பேராசிரியரும் குறிப்பிடுகின்றனர். (72)

**அந்தணர்க்கும் அரசர்க்கும் ஒத்தவை**

**617. அந்த ணாளர்க்கு உரியவும் அரசர்க்கு**
**ஒன்றிய வருஉம் பொருளுமார் உளவே.**

**(இ-ள்)** அந்தணர்க்குரிய தொழில் ஆறு. அவற்றுள் ஈதல், வேட்டல், வேட்பித்தல், ஓதல் என்கின்ற நான்கும் அரசர்க்கும் உரியவையாய் வரும்.

அந்தணர்க்கு உரியவை எனக் கூறப்பட்ட பொருள்களுள் முப்புரிநூல், மணை போல்வன அரசர்க்கும் உரியதாய் வரும் என்கிறார் பேராசிரியர். (73)

**அரசர்க்கே சிறப்பாய் உரியவை**

**618. பரிசில் பாடாண் திணைத்துறைக் கிழப்பெயர்**
**நெடுந்தகை செம்மல் என்றுஇவை பிறவும்**
**பொருந்தச் சொல்லுதல் அவர்க்குஉரித்து அன்றே.**

**(இ-ள்)** பரிசில் பற்றிய செய்திகளைக் கூறி அரசனைச் சிறப்பித்துப் புகழ்வது பாடாண் திணை. அத்திணையில் **பரிசில் கடாநிலை, பரிசில் விடை** போன்ற துறைகள் அமைந்துள்ளன. இந்நிலைகளில் அரசனைப் புகழ்ந்து கூறுவதற்குப் புலவர்கள் கூறும் பெயர்கள் **நெடுந்தகை, செம்மல்** என்பனவாகும். இவற்றையும் இவற்றைப் போன்ற **காளை, இளையோன், வள்ளல்** என்னும் பிற பெயர்களும் அரசர்க்கு மட்டுமே உரியனவாய் வரும். இவை அந்தணர்க்குப் பொருந்தி வருவதில்லை. (74)

**நால்வகை வருணத்தார்க்கும் உரியவை (3)**

**619. ஊரும்[1] பெயரும்[2] உடைத்தொழில் கருவியும்[3]**
**யாரும் சார்த்தி அவைஅவை பெறுமே.**

**(இ-ள்)** அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் என்பவர் நால்வகை வருணத்தார் ஆவர். இந்நால்வகையினரும் 1.ஊர்ப்பெயர் 2.இயற்பெயர், சிறப்புப் பெயர் 3.அவரவர்தம் தொழிலுக்கேற்ற கருவிகள் ஆகியவற்றுடன் சேர்த்துக் கூறப்பெறுவர்.

**நால்வர்க்கும் உடைத்தொழில் கருவிகள்:** அந்தணாளர்க்குச் சுருவையும் (நெய்த்துடுப்பு) சமிதை (ஓமவிறகு) குறைக்கும் கருவியும் முதலாயின. அரசர்க்குக் குடியும் கூழும் அமைச்சும் நட்பும் முதலாயின. வணிகர்க்கு நாவாயும் (மரக்கலம்) மணியும் மருந்தும் முதலாயின. வேளாளர்க்கு நாஞ்சிலும் (கலப்பை) சகடமும் (வண்டி) முதலாயின என விளக்கம் தருகிறார் பேராசிரியர். (75)

**வருணத்தார்க்குரிய தலைமைக் குணச்சொல்**

620. **தலைமைக் குணச்சொலும் தத்தமக்கு உரியதோர்**
**நிலைமைக்கு ஏற்ப நிகழ்த்துப என்ப.**

**(இ-ள்)** நால்வகை வருணத்தாரையும் அவர் அவரின் தன்மைக்கேற்ற நிலைக்குப் பொருந்தும் வண்ணம் தலைமைக் குணம் உடையவராகக் கூறுதலும் உண்டு என்று சொல்லுவர் புலவர்.

இதிலிருந்து ஓரினத்தாரை அளவிற்கு அதிகமாகப் புகழ்ந்து கூறுதலும் இகழ்ந்து கூறுதலும் ஆகாது என்கிறார் இளம்பூரணர்.

நான்கு வருணத்தாரின் தலைமைக் குணத்தைக் கூறும் நிலையில் 1.அந்தணரைப் படைப்புக் கடவுளாகிய பிரமனோடும் 2.அரசரைக் காத்தல் கடவுளாகிய திருமாலோடும் 3.வணிகரைச் செல்வத்திற்குத் தலைவனாகிய குபேரனோடும் 4.வேளாளரை மழைக் கடவுளாகிய வருணனோடும் கூறித் தலைமைக் குணச்சொல் நிகழ்த்தப்படும் என்கிறார் பேராசிரியர். (76)

**படைக்கருவிக்கு உரியவர் (2)**

621. **இடைஇரு வகையோர் அல்லது நாடின்**
**படைவகை பெறாஅர் என்மனார் புலவர்.**

**(இ-ள்)** அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்போர் நால்வகை வருணத்தினர். அவர்களுள் இடையில் நிறுத்தப்பட்டுள்ளவர் அரசரும் வணிகரும் ஆவர். இவ்விருவருக்கு மட்டுமே படைக்கருவிகளை வைத்துக் கொள்வதற்கு உரிமை உண்டு என்று சொல்லுவர் புலவர்.

எஞ்சிய அந்தணரும் வேளாளரும் படைக்கல வகை பெறுவதற்கு உரிமை அற்றவராவர். (77)

**வணிக மரபினர்**

622. **வைசிகன் பெறுமே வாணிக வாழ்க்கை.**

**(இ-ள்)** நால்வகை வருணத்தாருள் ஒருவர் வணிகர். வைசிகர் என்று அழைக்கப்படும் அவ்வணிகர்க்கு வாணிகம் செய்து வாழும் வாழ்க்கை உரியதாகும். வைசிகன் - வாணிகம் செய்வோன். (78)

**வணிகர் விளைவிக்கும் பொருள்கள் (8)**

623. **மெய்தெரி வகையின் எண்வகை உணவின்**
**செய்தியும் வரையார் அப்பா லான.**

**(இ-ள்)** வழக்கின் மெய்ம்மையினை ஆராய்ந்த வகையில் வாணிகத் தொழில் வணிகர்க்கு உரியதாகும். அத்துடன் எட்டு வகையான உணவுப் பொருள்களை விளைவிக்கும் உழவுத் தொழிலும் அவ்வணிகர்க்கு உரியதாகும்.

எட்டு வகையான உணவுப்பொருள்களாவன : 1.நெல் 2.காணம் (கொள்ளு) 3.வரகு 4.இறுங்கு (சோளம்) 5.தினை 6.சாமை 7.புல் 8.கோதும்பை என்பர் இளம்பூரணர்.

1.பயறு 2.உழுந்து 3.கடுகு 4.கடலை 5.எள்ளு 6.கொள்ளு 7.அவரை 8.துவரை என்பன பேராசிரியர் காட்டும் எண்வகை உணவுப் பொருள்களாகும். (79)

### வணிகர்க்குரிய மாலைகள் (2)

**624. கண்ணியும்[1] தாரும்[2] எண்ணினர் ஆண்டே.**

**(இ-ள்)** வணிக மரபினர் 1.கண்ணி (தலைமாலை) 2.தார் (கழுத்தில் அணியும் மாலை) ஆகிய இரண்டு மாலைகளையும் அணிவதற்கு உரிமை உடையவர் ஆவர்.

**விளக்கம் :** கண்ணி என்பது சூடும்பூ; தார் என்பது ஒரு குடிப்பிறந்தார்க்கு உரித்தென வரையறுக்கப்படுவதாயிற்று. அது குடிகளுக்கு ஏற்பப் பலவாகி வரும் என விளக்கம் அளிக்கிறார் பேராசிரியர். (80)

### வேளாளர்க்குரிய தொழில்

**625. வேளாண் மாந்தர்க்கு உழுதுஊண் அல்லது**
**இல்என மொழிப பிறவகை நிகழ்ச்சி.**

**(இ-ள்)** நான்காம் வருணமாக வரிசைப்படுத்தப்பட்டவர் வேளாளர். அவ்வேளாண் மாந்தர் உழவுத் தொழிலைச் செய்து உண்டு வாழ்வர். அதனைத் தவிரப் பிறவகையில் செய்யும் செயல் எதுவும் அவர்களுக்கு இல்லை என்று சொல்லுவர் புலவர்.

வேளாளர் - உழவுத் தொழிலுக்கு மட்டுமே உரியவர். (81)

### வேளாளர் - சிறப்பு வரையறை

**626. வேந்துவிடு தொழிலின் படையும் கண்ணியும்**
**வாய்ந்தனர் என்ப அவர்பெறும் பொருளே.**

**(இ-ள்)** வேளாளர், வேந்தனால் அரசு தொடர்பான தொழிலைச் செய்வதற்கு ஏவப்படுவர். அந்நிலையில் அரசனுக்குரிய படைக் கருவியும் மாலையும் அவருக்கும் உரியனவாய் அமையும் என்று சொல்லுவர் புலவர். (82)

### அந்தணர் - அரசர்க்கு இணையாதல்

**627. அந்த ணாளர்க்கு அரசுவரை வின்றே.**

**(இ-ள்)** அந்தணர் அமைச்சர் பதவியையும் படைத்தலைவர் பதவியையும் பெறுவர். அந்நிலைகளில் அவருக்கு அரசராய் ஆட்சி செய்யும் உரிமையும் நீக்கப்படாது.

அதாவது அரசருக்கு அந்தணர் அமைச்சராவதோடு புரோகிதராகவும் வழிநடத்தும் இடமும் உண்டு. அச்சமயங்களில் கொடி, குடை, கவரி, தார் போன்றவற்றை அந்தணர் அரசரிடமிருந்து பெறுவர். அவற்றைப் பெற்று அரசர்க்கு நிகராய் ஒத்த தன்மையில் இருப்பர் என விளக்கம் தருகிறார் இளம்பூரணர். *(83)*

**ஏனோர்க்கு உரியவை (8)**

**628. வில்லும்[1] வேலும்[2] கழலும்[3] கண்ணியும்[4]**
**தாரும்[5] ஆரமும்[6] தேரும்[7] மாவும்[8]**
**மன்பெறு மரபின் ஏனோர்க்கு உரிய.**

**(இ-ள்)** *1.*வில் *2.*வேல் *3.*வீரக்கழல் *4.*தலைமாலை *5.*கழுத்தணி *6.*மார்பணி *7.*தேர் *8.*மா (குதிரை,யானை) என்பவை மன்னனுக்கு உரியவை. இவை அனைத்தும் மன்னனால் கொடுக்கப்படும் நிலையில் வணிகருக்கும் வேளாளருக்கும் உரிமை உடையவை ஆகும். *(84)*

**இழிந்தோர் நிலை**

**629. அன்னர் ஆயினும் இழிந்தோர்க்கு இல்லை.**

**(இ-ள்)** அரசனால் ஏவப்படும் நிலை நால்வகை வருணத்தாரிலும் தாழ்ந்தவர்க்கும் பொருந்தி வரும். ஆயினும் மேற்கூறப்பட்ட வில் முதலான பொருள்கள் அவர்களுக்கு உரிமை உடையனவாகக் கொடுக்கப்படுவதில்லை. *(85)*

## ஓரறிவு உயிர்க்குரிய மரபுகள்

**புல்லின் இலக்கணம்**

**630. புறக்காழ் அனவே புல்எனப் படுமே.**

**(இ-ள்)** ஓரறிவு உடையனவற்றுள் புறப்பகுதி வலிமையுடையதாய் இருக்கும். உட்பகுதி வலிமையற்ற சோற்றுப்பகுதியாய் அமைந்திருக்கும். இத்தன்மை உடையவற்றைப் புல் என்று அழைப்பர்.
**(எ-டு)** தெங்கு, பனை, கமுகு, மூங்கில்.
தெங்கம்புல், பனம்புல், கமுகம்புல், மூங்கிற்புல். *(86)*

**மரத்தின் இலக்கணம்**

**631. அகக்காழ் அனவே மரம்எனப் படுமே.**

**(இ-ள்)** வெளிப்பகுதி மென்மைத் தன்மை உடையதாய்க் காணப்படும். உட்பகுதி வலிமை கொண்ட வயிரத் தன்மை கொண்டிருக்கும். இத்தன்மை உடையவற்றை மரம் என அழைப்பர். *(87)*

### புல்லினது உறுப்புகள் (8)

632. தோடே[1] மடலே[2] ஓலை[3] என்றா
ஏடே[4] இதழே[5] பாளை[6] என்றா
ஈர்க்கே[7] குலையே[8] நேர்ந்தன பிறவும்
புல்லொடு வரும்எனச் சொல்லினர் புலவர்.

**(இ-ள்)** *1.தோடு 2.மடல் 3.ஓலை 4.ஏடு 5.இதழ் 6.பாளை 7.ஈர்க்கு 8.குலை* என்பன உறுப்பின் பெயர்களாகும். இவையும் இவை போன்ற பிற உறுப்புகளையும் கொண்டவை புல் எனப்படும் ஓரறிவு உயிர்களைச் சார்ந்து வருவனவாகும் என்று சொல்லுவர் புலவர். **(எ-டு)**

ஆடரைப் பெண்ணைத் **தோடுமடல்** ஏறி (நற்றிணை.338)
பெண்ணை வீழ்கால் **ஓலை** (நற்.354) தாமரைப் புல்**லிதழ்** (பெரும்பாண்.114)
அலங்கு**குலைக்** காந்தள் (நற்.359)

**விளக்கம் :** புறப்பகுதி திண்மை அற்றும் உட்பகுதி சோறாகவும் அமைந்த ஓரறிவு உயிர்கள் உண்டு. அவையும் மேற்கூறப்பட்ட உறுப்புகளைப் பெயராகக் கொண்டு புல் என வழங்கப்படும். அவை வாழை, ஈந்து, தாமரை, கழுநீர் போல்வனவாகும். (88)

### மரத்தினது உறுப்புகள் (9)

633. இலையே[1] முறியே[2] தளிரே[3] தோடே[4]
சினையே[5] குழையே[6] பூவே[7] அரும்பே[8]
நனையே[9]உள் உறுத்து அனையவை எல்லாம்
மரனொடு வரூஉம் கிளவி என்ப.

**(இ-ள்)** *1.*இலை *2.*முறி *3.*தளிர் *4.*தோடு *5.*சினை *6.*குழை *7.*பூ *8.*அரும்பு *9.*நனை உட்பட்ட பெயர்கள் ஓரறிவு உயிர்களின் உறுப்புப் பெயர்களாகும். இவை அனைத்தும் மரம் என்னும் ஓரறிவு உயிரினைச் சார்ந்து வரும் தன்மை கொண்டவை என்று சொல்லுவர் புலவர். **(எ-டு)**

| | |
|---|---|
| தேக்**கிலை** குவைஇ | (பெரும்பாண்.104) |
| மரஞ்சேர்த்திய கவை**முறி** | (அகம்.257) |
| யாஅ ஒண்**தளிர்** | (மலைபடுகடாம்.313) |
| பெருஞ்**சினை** இருந்த தோகை | (குறுந்.26) |
| கொய் **குழை** அகைகாஞ்சி | (கலி.74) |
| வேங்கை .... **அரும்பு** | (அகம்.232) |
| புகழா வாகைப் **பூ** | (பெரும்பாண்.109) |

புறத்தில் திண்மையும் உள்ளே வயிரமும் இல்லாதனவாய்க் காணப்படும் ஓரறிவு உயிர்களும் உள்ளன. இவையும் மரமாகக் கொள்ளப்பட்டு மரத்திற்குரிய உறுப்புப் பெயர்களைப் பெற்று வருவதும் உண்டு. அவை முருக்கு (முள்முருங்கை), தணக்கு முதலாயின என்பர் இளம்பூரணர். (89)

**இருவகைக்கும் உரிய பொது உறுப்புகள் (5)**

634. **காயே[1] பழமே[2] தோலே[3] செதிளே[4]**
**வீழோடு[5] என்றாங்கு அவையும் அன்ன.**

**(இ-ள்)** *1.காய் 2.பழம் 3.தோல் 4.செதிள் 5.வீழ் (விழுது)* என்பன ஓரறிவு உயிர்களின் உறுப்புப் பெயர்களாகும். இவை புல், மரம் என்னும் இரண்டற்கும் பொதுவாகப் பொருந்தி வரும் தன்மை கொண்டவை.

**(எ-டு)** புறழ்க்**காய்** கொன்றை *(நற்றிணை.296)*
வேம்பின் ஒண்**பழம்** *(நற்றிணை.279)*
**தோல்**நயந் துண்ட பொரிதாள் ஓமை *(குறுந்.79)*
பல்**வீழ்** ஆலம்போல *(அகம்.70)*

பூவொடு கிளைகளையும் உடையது தாழை. இது புறப்பகுதி கடினத் தன்மையற்றுக் காணப்படுகிறது. ஆயினும் அதனை மரம் என்னும் பெயரால் அழைக்காமல் புல் என்றலே பெரும்பான்மை வழக்காகும் என்கிறார் இளம்பூரணர். *(90)*

**மரபைப் பின்பற்றிக் கூறுதல்**

635. **நிலம்[1]தீ[2] நீர்[3]வளி[4] விசும்போடு[5] ஐந்தும்**
**கலந்த மயக்கம் உலகம் ஆதலின்**
**இருதிணை ஐம்பால் இயல்நெறி வழாமைத்**
**திரிவில் சொல்லொடு தழாஅல் வேண்டும்.**

**(இ-ள்)** *1.நிலம் 2.நெருப்பு 3.நீர் 4.வளி (காற்று) 5.விசும்பு (வானம்)* என்னும் ஐம்பெரும்பூதங்களும் கலந்த சேர்க்கையே உலகம் ஆகும். இவ்வுலகத்தில் காணப்படும் பொருள்கள் அனைத்தையும் இரண்டு திணை, ஐந்து பால் ஆகியவை குற்றப்படாத வகையில் மயக்கம் ஏற்படா வண்ணம் பொருத்தமான சொற்களைக் கூறித் தழுவிக் கொள்ளுதல் வேண்டும்.

**விளக்கம் : கலந்த மயக்கம்** என்னும் தொடரில் கலத்தல், மயக்கம் என்னும் இரு சொல்லாட்சி இடம்பெற்றுள்ளன.

அவற்றுள் கலத்தல் - முத்தும் பவளமும் நீலமும் மாணிக்கமும் விரவினாற் போன்று அமைந்திருத்தல். மயக்கம் - பொன்னும் வெள்ளியும் செம்பும் உருக்கி ஒன்றாதல் போன்றிருத்தல்.

உலகினையும் உலகில் உள்ள பொருள்களையும் தொல்காப்பியர் உலகம் எனப் பொதுவாகக் கூறினார். உலகமாவது முத்தும் மணியும் கலந்தாற் போல நிலம், நீர், தீ, வளி, வான் என வேற்றுமை அறியும் வண்ணமும் கலந்து நிற்கும்.

உலகில் உள்ள பொருள்கள் பொன்னும் வெள்ளியும் செம்பும் உருக்கி ஒன்றானாற் போல வேற்றுமைப்படாமலும் நிற்கும்.

வேற்றுமைப்படுதல், வேற்றுமைப்படாமை என்னும் இரு இயல்புகளும் இவ்வுலகிற்கு உண்டு. இக்கருத்துப் பற்றியே தொல்காப்பியர் உலகினைக் கலந்த மயக்கம் என இரண்டு சொற்களால் குறிப்பிடுகிறார்.

ஐம்பூதக் கூட்டுறவால் உருவாகிய இவ்வுலகில் உள்ள பொருள்கள் உயர்திணை, அஃறிணை என இரண்டு திணையாகவும் ஆண், பெண், பலர், ஒன்று, பல என ஐந்து பாலாகவும் பகுக்கப்பட்டுள்ளன. இந்நெறியினை அறிந்து வழுவாத சொற்களைக் கொண்டு தொடர்களை அமைத்து வழங்க வேண்டும்.

**சாத்தன் சோற்றை உண்டான்.** இது உண்டற்குரியான் எனக் கூறுதலின் மரபாயிற்று. வழுவின்றிக் கருதிய பொருள் இத்தொடரில் முடிந்தது.

**குழந்தை** என்பது உயர்திணைக்கு உரியது. அக்குழந்தையை **அழுதான், அழுதாள்** எனக் கூறாமல் **அழுதது** என அஃறிணைக்குரிய பாலால் கூறுவது வழுவாயினும் திரிவில் சொல் என்றதனால் இதுவும் ஏற்றுக்கொள்ளப்படும். (91)

**செய்யுட்குரிய மரபு**

**636. மரபுநிலை திரிதல் செய்யுட்கு இல்லை**
**மரபுவழிப் பட்ட சொல்லி னான.**

**(இ-ள்)** செய்யுள் என்பது இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என்னும் மரபுவழிப்பட்ட சொற்களால் செய்யப்படுவதாகும். எனவே செய்யுளிலும் செய்யுட்கள் அடங்கிய நூல்களிலும் மரபுநிலை என்பது எந்தவொரு இடத்திலும் திரிந்து அமைதல் என்பது இல்லை.

எந்தவொரு செய்யுளையும் இலக்கணம் ஓதுகின்ற மரபினால் செய்ய வேண்டும் என்பதாம்.

மரபுநிலை திரிதல் என்பது செய்யுட்கு இல்லை என்று கூறப்படுவதிலிருந்து வழக்கினுள் மரபுநிலை திரிந்து வழங்கப்பெறும். அது விலங்கினுள் ஆணினைப் போத்து என்று வழங்கல் போல்வன என விளக்கம் தருகிறார் இளம்பூரணர். (92)

**மரபு திரிதல் கூடாது**

**637. மரபுநிலை திரியின் பிறிதுபிறிது ஆகும்.**

**(இ-ள்)** மேற்கூறிய மரபுநிலை மாறுபட்டுத் திரிந்து வருமாயின் பொருள் வேறு வேறாக அமையும்.

அவ்வாறு வருவது வழுவமைதியாகக் கொள்ளப்படாது. மாறாக வழு (குற்றம்) என நீக்கப்படும். எனவே மரபுநிலை திரிதல் இன்றியும் பொருள் மயக்கம் இன்றியும் செய்யுள் செய்தல் வேண்டும். (93)

**உயர்ந்தோர் வழக்கே வழக்கு**

**638. வழக்குஎனப் படுவது உயர்ந்தோர் மேற்றே**
**நிகழ்ச்சி அவர்கண் ஆக லான.**

**(இ-ள்)** கற்று உயர்ந்த பெரியோரைச் சார்ந்தே உலக நிகழ்ச்சிகள் நடைபெறும். அதனால் மேன்மக்கள் கையாளும் ஒழுகலாறே வழக்கு என்று சிறப்பித்துச் சொல்லப்படுகிறது.

**விளக்கம் :** பனம்பாரனார் இயற்றிய இந்நூலின் சிறப்புப் பாயிரத்துள்,

வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின்
எழுத்தும் சொல்லும் பொருளும் நாடி

எனக் கூறப்பட்டது. எனவே உலக வழக்கு வழக்கு ஆகாதோ என்ற ஐயம் எழுகிறது. அங்குக் கூறப்பட்ட உலக வழக்கு என்பதும் உயர்ந்தோர் வழக்கினையே குறிக்கும். எனவே இழிந்தோர் வழக்கு வழக்காகக் கொள்ளப்படுவதில்லை என்று மறுத்துரைக்கிறார் இளம்பூரணர். (94)

**நூலின் வகைகள் (2)**

**639. மரபுநிலை திரியா மாட்சிய ஆகி**
**உரைபடு நூல்தாம் இருவகை நிலைய**
**முதலும்[1] வழியும்[2] என நுதலிய நெறியின.**

**(இ-ள்)** தொன்றுதொட்ட மரபிலிருந்து சற்றும் மாறாமல் அமையும் இன்றியமையாத இயல்பினை உடையது நூலாகும். மேன்மைத் தன்மை பொருந்தியதாய் உரைக்கப்படும் அந்நூல் இரண்டு வகைப்படும். அவை 1.முதல்நூல் 2.வழிநூல் என்று முன்னோரால் சொல்லப்படுகின்ற நெறியினை உடையவை ஆகும்.

**விளக்கம் :** முதல், வழி என்னும் இவ்விரண்டு நூல்களுக்கு மேலாகச் **சார்பு நூல்** என்ற ஒன்றும் கூறப்படுகிறது. அந்நூலும் ஆசிரியர் கூறியவற்றிற்கு உடன்பட்டு வருவதால் அதனையும் வழிநூலுள் அடக்கலாம். எதிர் நூல் என்பதும் ஒன்று உண்டு. அதுவும் ஒரு முனைவனால் செய்யப்படின் முதல் நூலாகும். பிறர் செய்யின் அதனை நூல் என்று ஏற்றுக் கொள்ளாமையால் அந்நூல் வழக்கில் இடம்பெறாது என்று விளக்கம் தருகிறார் இளம்பூரணர். (95)

**முதல் நூல் - இலக்கணம்**

**640. வினையின் நீங்கி விளங்கிய அறிவின்**
**முனைவன் கண்டது முதல்நூல் ஆகும்.**

**(இ-ள்)** இயல்பாகவே வினையிலிருந்து நீங்கி விளக்கம் பெற்ற அறிவையுடையவன் முதல்வன் ஆவான். அம்முதல்வன் தானே அறிந்து இயற்றித் தந்தது முதல்நூலாகும்.

வினையின் நீங்குதல் - நல்வினை, தீவினை என்னும் இரு வினைகளிலிருந்து இயல்பாகவே நீங்குதல். வினைகளே அறிவினை மறைப்பது. அவற்றிலிருந்து நீங்குவது மெய்ஞ்ஞானத்திற்கு வழியாகும். முனைவன் - முதல்வன் - இறைவன். (96)

**வழிநூல் – இலக்கணம்**

**641. வழிஎனப் படுவது அதன்வழித்து ஆகும்.**

**[இ-ள்]** முதல்வன் இயற்றிய நூலைப் பின்பற்றிச் செய்யப்படுவது வழிநூல் எனச் சொல்லப்ப'டுவதாகும். (97)

**வழிநூலின் பாகுபாடுகள்**

**642. வழியின் நெறியே நால்வகைத்து ஆகும்.**

**[இ-ள்]** முதல்நூலை அடிப்படையாகக் கொண்டு வழிநூல் இயற்றுவதற்குரிய முறைகள் நான்கு வகைப்படும். (98)

**வழிநூலின் வகைகள் (4)**

**643. தொகுத்தல்[1] விரித்தல்[2] தொகைவிரி[3] மொழிபெயர்த்து[4]**
**அதர்ப்பட யாத்தலொடு அனைமர பினவே.**

**[இ-ள்]** முதல்நூலையொட்டி வழிநூல் செய்யும் முறை நான்கு வகைப்படும். அவை 1.முதல் நூலாசிரியன் விரித்துச் செய்தவற்றைத் தொகுத்துச் செய்தல் 2.தொகுத்துச் செய்ததை விரித்துச் செய்தல் 3.மேற்கூறிய இருவகையினையும் தொகை விரியாகச் சொல்லுதல் 4.ஒருமொழியில் உள்ள நூலை வேறொரு மொழியில் மொழி பெயர்த்துக் கூறுதல் என்னும் வழிமுறைகளில் அமைக்கப்படும் இயல்பினை மரபாகக் கொண்டவை ஆகும்.

**மொழிபெயர்த்தல்:** வடமொழிப் பனுவலை (நூல்) மொழி பெயர்த்துத் தமிழ்மொழியால் செய்தல் என்கிறார் இளம்பூரணர். (99)

**நூலின் இலக்கணம் (5)**

**644. ஒத்த சூத்திரம்[1] உரைப்பின் காண்டிகை[2]**
**மெய்ப்படக் கிளந்த வகையது ஆகி[3]**
**ஈர்ஐங் குற்றமும் இன்றி[4] நேரிதின்**
**முப்பத்து இருவகை உத்தியொடு[5] புணரின்**
**நூல்என மொழிப நுணங்குமொழிப் புலவர்.**

**[இ-ள்]** 1.பொருத்தமான சூத்திரங்களால் படைக்கப்படுதல் 2.அச்சூத்திரங்களை உரைப்படுத்திக் கூறிய நிலையில் அவை காண்டிகை உரையாகும் தன்மையைப் பெற்றிருத்தல் 3.விரித்துக் கூறுகின்ற உரைக்கு ஏதுவாக அமைந்திருத்தல்

4.நுண்மையான கருத்துகள் செறிந்ததாய் அவற்றை விளக்கமுற எடுத்துரைக்கும் தன்மையைப் பெற்றிருத்தல் 5.அசைக்க முடியாத தெளிவினைத் தரும் துணைச்சூத்திரங்களை உடையதாய் இருத்தல் 6.வரையறுக்கப்படாத அரிய பொருளை உடைத்தாதல் 7.பல நிலைகளிலும் பயனைத் தருவதாய் அமைதல் என்னும் இவ்இயல்புகளைக் கொண்டதாய் உடையதனைச் சூத்திரம் என்னும் பெயரால் இயற்றியமைத்தனர் புலவர்.

**விளக்கம் :** அளக்கல் ஆகா அரும்பொருள் என்பதற்குப் பல நிலைகளிலும் பொருள் கொள்ளக் கிடத்தல் என விளக்கம் தருகிறார் இளம்பூரணர். மேலும் செய்யுளியலில் இடம்பெற்ற **சூத்திரம் தானே.... யாத்து அமைப்பதுவே (நூ.162)** என்பதையும் சூத்திரத்திற்குரிய இலக்கணமாகக் குறிப்பிடுகிறார். *(102)*

### காண்டிகை உரையின் இலக்கணம்

**647.** **பழிப்பில் சூத்திரம் பட்ட பண்பின்**
**கரப்பின்றி முடிவது காண்டிகை ஆகும்.**

**(இ-ள்)** குற்றமில்லாத இயல்பைப் பொருந்தியது சூத்திரம் ஆகும். அச்சூத்திரம் அமைந்த முறையில் அதனுள் இடம்பெற்ற கருத்தை மறைத்தல் இன்றித் தெளிவாகப் பிறர் உணரும்படி விளக்குவது காண்டிகை உரை ஆகும். *(103)*

### காண்டிகை உரையின் தன்மை (5)

**648.** **விட்டகல் வின்றி[1] விரிவொடு பொருந்திச்[2]**
**சுட்டிய சூத்திரம் முடித்தற் பொருட்டா**
**ஏது நடையினும்[3] எடுத்துக் காட்டினும்[4]**
**மேவாங்கு அமைந்த மெய்ந்நெறித் ததுவே[5].**

**(இ-ள்)** *1.*சூத்திரத்தில் இடம்பெற்ற சொற்பொருளாகிய கருத்தை விட்டு விலகிச் செல்லாமை *2.*விரித்துரைப்பதற்கு ஏதுவான கருத்துகளைப் பெற்றிருத்தல் *3.*சூத்திரம் குறித்த பொருளை முடிப்பதற்கு ஏற்ற காரண காரியங்களை உடையதாய் இருத்தல் *4.*தக்க எடுத்துக்காட்டுகளைக் கொண்டிருத்தல் *5.*ஆசிரியனின் கருத்தமைந்த பொருள்நெறியைப் புலப்படுத்திக் காட்டுதல் என்னும் தன்மைகளை உடையது காண்டிகை உரையாகும்.

**விளக்கம் :** விட்டு அகல்வின்றி விரிவொடு பொருந்துதல் என்பது கூறவந்த கருத்திலிருந்து விலகிச் செல்லாமை - மிக அகலாமை.

சூத்திரப் பொருள் (கருத்து) - இம்மலை நெருப்பினை உடையது
ஏது (காரணம்) - புகையுடையதாய் இருத்தல்

எடுத்துக்காட்டு - அடுக்களை போல (சமையல் அறையில் தீயைக் கொண்டு சமைக்கும்போது புகை வருதல் போல)

1.சூத்திரம் கூறும் கருத்து 2.அதனை வெளிப்படுத்துவதற்குரிய ஏது 3.அதனை விளக்குவதற்குக் கூறும் எடுத்துக்காட்டு ஆகிய கூறுகளைக் கொண்ட முறையில் காண்டிகையுரையை அமைக்க வேண்டும் என்கிறார் இளம்பூரணர். (104)

## விருத்தியுரையின் பொதுவிலக்கணம்

649. சூத்திரத்து உட்பொருள் அன்றியும்[1] யாப்புற
இன்றி யமையாது இயைபவை எல்லாம்
ஒன்ற உரைப்பது[2] உரைஎனப் படுமே.

**(இ-ள்)** *1.*சூத்திரம் கூறுகின்ற உட்பொருளை எடுத்துக் கூறுதல் 2.அஃதல்லாமல் அச்சூத்திரத்தில் எடுத்துரைக்கப்பட்ட பொருளுக்கு ஏற்ற இன்றியமையாச் செய்திகள் அனைத்தையும் கொண்டு வந்து பொருந்துமாறு உரைத்தல். இவ்வாறாக அமைந்த தன்மைகளை உடையதே உரை எனப்படும். (105)

## விருத்தியுரையின் அமைப்பு (4)

650. மறுதலைக் கடாஅ மாற்றமும் உடைத்தாய்த்[1]
தன்நூ லானும் முடிந்தநூ லானும்[2]
ஐயமும் மருட்கையும் செவ்விதின் நீக்கித்[3]
தெற்றென ஒருபொருள் ஒற்றுமை கொளீஇத்
துணிவொடு நிற்றல்[4] என்மனார் புலவர்.

**(இ-ள்)** *1.*நூலாசிரியன் சொல்லும் கருத்துகளை மறுத்து, வினவும் வினாக்களுக்குப் பொருத்தமான விடைகள் உடையனவாகச் செய்தல் 2.தான் உரை எழுதும் நூலின் நெறியிலோ அப்பொருளை முடியக் கூறுகின்ற பிறநூல் நெறியிலோ நிற்றல் 3.அவற்றின் துணைகொண்டு நூலின் கருத்துப் பற்றி ஏற்படும் ஐயத்தையும் தவறாகக் கருதும் மயக்கத்தையும் சிறந்த முறையில் நீக்குதல் 4.இதுவே இதற்குப் பொருள் எனத் தெளிவுண்டாகும்படி கருத்தோடு ஒற்றுமைப்படுத்தித் துணிவு பெற நிலைப்படுத்தி உரைத்தல். இவ்வாறாக அமைவதே உரையின் இயல்பு என்று புலவர் சொல்லுவர்.

**விளக்கம் : ஐயம்:** ஒரு பெண்ணைத் தெய்வ மகளோ! மயிலோ! மானுடப்பெண்ணோ! என ஐயப்படுவது.

**மருட்சி – மயக்கம்:** கயிற்றைப் பாம்பு என்றும் கிளிஞ்சலை வெள்ளி என்றும் ஒன்றை வேறொன்றாகத் திரியக் காண்பது. (106)

**வழிநூலை அமைக்கும் முறை**

**651. சொல்லப் பட்டன எல்லா மாண்பும்
மறுதலை ஆயின் மற்றது சிதைவே.**

**(இ-ள்)** இதுவரை நூலுக்கெனச் சொல்லப்பட்டவை சூத்திரம், காண்டிகை, உரை என்னும் மூவகை மாண்புகளாகும். இம்மாட்சிகளைப் பின்வந்த வழிநூல் பெற்றிருந்தும் முதல் நூலோடு பொருளால் மாறுபட்டால் அவ்வழிநூலைக் குற்றமுடையதாகவே கொள்வர்.

வழிநூல் என்பது முதல்நூலின் பொருளோடு மாறுபடாமல் அமைக்கப்பட வேண்டும். இல்லையேல் அது குற்றமுடைய வழிநூலாகக் கருதப்படும். (107)

**முதல்நூலின் சிறப்பு**

**652. சிதைவில என்ப முதல்வன் கண்ணே.**

**(இ-ள்)** வினையிலிருந்து நீங்கித் தெளிந்த அறிவினை உடைய முனைவனால் செய்யப்படுவது முதல்நூல். அந்நூலில் சிதைவுகளாகிய குற்றம் இடம்பெறுவதில்லை என்று சொல்லுவர் புலவர். (108)

**வழி நூல் செய்வோனின் திறம்**

**653. முதல்வழி ஆயினும் யாப்பினுள் சிதையும்
வல்லோன் புனையா வாரம் போன்றே.**

**(இ-ள்)** முதல்நூலைப் பின்பற்றி இயற்றப்படுவது வழிநூலாகும். அவ்வழிநூலின் யாப்பினது போக்கில் முதல்நூலின் கருத்துச் சிதைந்து காணப்படுவதுண்டு. அது இசைநுணுக்கத்தைத் தெளிவாக அறியாதவன் செய்த இசைப்பாட்டினைப் போன்ற குற்றத்தை உடையதாகும்.

இசைநுணுக்கத்தைத் தெளிவாக அறிந்தவன் செய்யும் இசைப்பாடலைப் போன்றது முதல்நூல். அந்நுணுக்கம் அறியாதவன் செய்யும் குற்றமுடைய பாடலைப் போன்றது வழிநூல் என்கிறார் தொல்காப்பியர். இதிலிருந்து யாப்பு முதலிய அனைத்திலும் முதல்நூல் ஆசிரியனைப் போலத் திறம்மேம்பட்ட ஒருவனால் மட்டுமே முதல்நூலை அடியொட்டிக் குற்றமில்லாத வழிநூலைச் செய்ய முடியும் என்கிறார் தொல்காப்பியர். (109)

**நூலில் இடம்பெறக் கூடாக் குற்றங்கள் (10 + 1 = 11)**

**654. சிதைவுஎனப் படுபவை வசையற நாடின்
கூறியது கூறல்[1] மாறுகொளக் கூறல்[2]
குன்றக் கூறல்[3] மிகைபடக் கூறல்[4]
பொருளில கூறல்[5] மயங்கக் கூறல்[6]**

**கேட்போர்க்கு இன்னா யாப்பிற் றாதல்[7]**
**பழித்த மொழியான் இழுக்கக் கூறல்[8]**
**தன்னான் ஒருபொருள் கருதிக் கூறல்[9]**
**என்ன வகையினும் மனங்கோள் இன்மை[10]**
**அன்ன பிறவும்[11] அவற்றுவிரி ஆகும்.**

**(இ-ள்)** நூலில் காணப்படும் குற்றங்கள் பலவாகும். அவற்றைக் குறைவற ஆராய்ந்தால் பத்தாக விரித்துரைக்கப்படும். அவை கூறியது கூறல் முதல் மனங்கோள் இன்மை ஈறாக அமைந்தனவாகும். இவற்றுடன் இவற்றை ஒத்த பிறவும் பத்து என முற்கூறப்பட்ட (நூ.644) குற்றங்களின் விரியாகக் கொள்ளப்படும்.

**1.கூறியது கூறல்:** ஓரிடத்தில் கூறிய செய்தியைப் பயனின்றி மீண்டும் பிற இடங்களிலும் கூறுதல்.

**2.மாறுகொளக் கூறல்:** முன்னர் ஏற்புடையது எனக் கூறிய கருத்தைப் பின்னர் மறுத்துக் கூறுதல். **(எ–டு)** தவம் நன்று என்று கூறியவனே அத்தவத்தைத் தீது என்று கூறுதல்.

**3.குன்றக் கூறல்:** இத்தனை என வரையறை செய்து கொண்ட பொருள்களுள் சிலவற்றை விளக்கிக் கூறாமல் விட்டுவிடுதல்.

**4.மிகைபடக் கூறல்:** கூறவந்த பொருளையே அல்லாமல் பிற பொருளையும் சேர்த்துக் கூறுதல். **(எ–டு)** தமிழிலக்கணத்தைக் கற்றுக் கொடுக்க வந்தவன் தேவையின்றி வடமொழி இலக்கணத்தையும் கூறுதல்.

**5.பொருளில கூறல்:** முன்னும் பின்னும் வருகின்ற பொருளுக்குத் தேவையற்ற கருத்துகளைப் பயனின்றிக் கூறுதல்.

**6.மயங்கக் கூறல்:** கேட்டவர்க்குப் பொருள் தெளிவின்றி இதுவோ அதுவோ என மயக்கம் ஏற்படும்படி கூறுதல்.

**7.கேட்போர்க்கு இன்னா யாப்பிற்றாதல்:** பொருளைப் புலப்படுத்து வதற்குச் செய்யப்பட்ட செய்யுள் இனிய ஓசை வேறுபாடுகளாகிய சந்த இயைபின்றி அமைக்கப்பட்டிருத்தல்.

**8.பழித்த மொழியால் இழுக்கக் கூறல்:** தாம் கூறவந்த கருத்தை உயர்ந்த சொற்களால் கூறாமல் இழிந்த சொற்களால் எடுத்துரைத்தல்.

**9.தன்னால் ஒருபொருள் கருதிக் கூறல்:** வழக்கு வழிப்பட்ட மரபில் கூறாமல் மாறான ஒன்றைத் தானே படைத்துக் கூறுதல்.

**10.என்ன வகையினும் மனங்கோள் இன்மை:** எழுத்தாலும் சொல்லாலும் பொருளாலும் பிறர் மனத்தில் பதியும்படி கூற முடியாமை.

**11.அன்னபிற :** இக்குற்றங்களை ஒத்ததாய் வரும் பிற குற்றங்கள்.

இவ்வாறு கூறப்பட்ட குற்றங்கள் இன்றி நூலினை இயற்ற வேண்டும். (110)

**நூலின் குற்றம் – சிறப்பு விதி**

**655. எதிர்மறுத்து உணரின்அத் திறத்தவும் அவையே.**

**(இ-ள்)** நூலில் கூறப்பட்ட பொருளைக் கற்போர் எதிர்மறுத்து உணரும் நிலையும் ஏற்படும். அவ்வாறு அமைதலும் நூலிற்குரிய குற்றமாகக் கருதப்படும்.

**விளக்கம் :** பாவம் செய்தவன் நரகத்திற்குச் செல்வான் என உணர்த்தக் கருதினான் ஒருவன். அதற்கு எதிர்மறையாகிய தவம் செய்பவன் சுவர்க்கம் செல்வான் எனக் கூறினான். இத்தொடரால் பாவம் செய்வான் நரகம் புகுவான் என்னும் கருத்துத் தோன்றவில்லை. எனவே இதுவும் ஓர் குற்றமாகும் என்று எதிர்மறுத்து உணர்தலை விளக்குகிறார் இளம்பூரணர். (111)

## உத்தி

ஒரு நூலாசிரியன் தன்கருத்தைப் பிறருக்கு எடுத்துக் கூறக் கடைப்பிடிக்கும் வெளிப்பாட்டு நெறிமுறைக்கு உத்தி என்று பெயர். நூலுக்குத் தந்திரம் என்னும் பெயர் உண்டு. அத்தந்திரத்தில் பயன்படும் வெளிப்பாட்டு முறையைத் தந்திர உத்தி எனக் கூறுவர்.

**உத்திகளின் வகைகள் (32)**

**656. ஒத்த காட்சி உத்திவகை விரிப்பின்
நுதலியது அறிதல்[1] அதிகார முறையே[2]
தொகுத்துக் கூறல்[3] வகுத்துமெய்ந் நிறுத்தல்[4]
மொழிந்த பொருளோடு ஒன்ற வைத்தல்[5]
மொழியாத அதனை முட்டின்றி முடித்தல்[6]
வாராத அதனான் வந்தது முடித்தல்[7]
வந்தது கொண்டு வாராதது முடித்தல்[8]
முந்து மொழிந்ததன் தலைதடு மாற்றே[9]
ஒப்பக் கூறல்[10] ஒருதலை மொழியே[11]
தன்கோள் கூறல்[12] உடம்பொடு புணர்த்தல்[13]
பிறன்உடம் பட்டது தான்உடம் படுதல்[14]
இறந்தது காத்தல்[15] எதிரது போற்றல்[16]
மொழிவாம் என்றல்[17] கூறிற்று என்றல்[18]
தான்குறி இடுதல்[19] ஒருதலை அன்மை
முடிந்தது காட்டல்[20] ஆணை கூறல்[21]
பல்பொருட்கு ஏற்பின் நல்லது கோடல்[22]
தொகுத்த மொழியான் வகுத்தனர் கோடல்[23]
மறுதலை சிதைத்துத் தன்துணிபு உரைத்தல்[24]
பிறன்கோள் கூறல்[25] அறியாது உடம்படல்[26]**

**பொருள்இடை இடுதல்[27] எதிர்பொருள் உணர்த்தல்[28]**
**சொல்லின் எச்சம் சொல்லியாங்கு உணர்த்தல்[29]**
**தந்துபுணர்ந்து உரைத்தல்[30] ஞாபகம் கூறல்[31]**
**உய்த்துக்கொண்டு உணர்த்தலொடு[32] மெய்ப்பட நாடிச்**
**சொல்லிய அல்ல பிறஅவண் வரினும்**
**சொல்லிய வகையால் சுருங்க நாடி**
**மனத்தின் எண்ணி மாசறத் தெரிந்துகொண்டு**
**இனத்தில் சேர்த்தி உணர்த்தல் வேண்டும்**
**நுனித்தகு புலவர் கூறிய நூலே.**

**(இ-ள்)** நூலுக்குப் பொருந்தியதாய்க் காட்சியினால் உரைக்கும் உத்திகளை விரிப்பின் அவை நுதலியது அறிதல் முதலாக உய்த்துக் கொண்டு உணர்தல் ஈறாகக் கூறப்பட்ட முப்பத்திரண்டும் ஆகும். உத்திகளை உள்ளபடி ஆராயும் நிலையில் இவற்றைப் போன்ற உத்திகள் பிறவும் தோன்றும். அவற்றை முற்கூறப்பட்ட முப்பத்திரண்டு வகைகளுக்குள் பொருத்தமுற ஆராய்ந்து அடக்கவேண்டும். அவ்வுத்திகள் பலவும் ஒன்றாகச் சேர்ந்து வந்தாலும் அவற்றை மனத்தால் தெளிவாக ஆராய்ந்து மயக்கம் தீரும்படி வேறுவேறாகத் தெரிந்து கொள்ளவேண்டும். பிறவகையில் அமையும் உத்திகளை முற்கூறப்பட்ட உத்திகளோடு ஒற்றுமைப்படுத்திப் பார்த்து இன்ன வகையைச் சார்ந்தது எனப் பெயர் கூறவேண்டும். அவ்வாறு தொகைப்படுத்திய நிலையிலும் அவற்றை வேறுவேறாகக் கொள்வதே தலைமை சான்ற ஆசிரியரால் கூறப்பட்ட நூல்களில் அமைந்த உத்திகளை இனம் காணும் முறையாகும்.

**1.நுதலியது அறிதல்:** சூத்திரத்தின் சொற்பொருளை மட்டும் உணர்த்துதல் அன்றி இதன் கருத்து இது என உணர்த்தல்.

**2.அதிகார முறை:** பல பொருளை வரிசைப்பட நிறுத்தி விவரித்துக் கூறும் முறையில் வரிசை மாறாமல் விளக்கிக் கூறுதல்.

தொல்காப்பியர் திணையை உயர்திணை, அஃறிணை எனப் பகுத்துக் கூறினார். அவ்வரிசையில் ஆடூஉ அறிசொல்லல நிறுத்தமுறை பிறழாமல் உயர்திணைக்கு உரியதாய் முதலில் கூறுகிறார்.

**3.தொகுத்துக் கூறல்:** வகைபெறக் கூற வேண்டுமாயினும் அதனை முன்கூட்டியே தொகுத்துக் கூறுதல்.

**எழுத்துஎனப் படுப**
**அகர முதல் னகர இறுவாய்**
**முப்பஃது என்ப** **(தொல். எழுத்து. நூ.1)**

எழுத்துகளை உயிர், மெய் எனப் பகுத்துக் கூறாமல் முப்பது எனத் தொகுத்துக் கூறுதல்.

**4.வகுத்துமெய்ந் நிறுத்தல்:** தொகுத்துக் கூறிய பொருளை வகுத்துக் கூறுதல்.

முப்பது என முற்கூறிய எழுத்துகளைக் குறில், நெடில், உயிர், மெய், மூவினம் என வகுத்துக் கூறுதல்.

**5.மொழிந்த பொருளோடு ஒன்ற வைத்தல்:** சூத்திரம் பலவாக அமையும். அந்நிலையில் முன்கூறப்பட்டதற்கும் பின்கூறப்படுவதற்கும் பொருள் ஒன்றுபடுமாறு கூறுதல்.

**6.மொழியாத அதனை முட்டின்றி முடித்தல்:** எடுத்து ஓதாத பொருளைத் தடையின்றி உரையினால் முடித்து வைத்தல். இதுவே உரையிற் கோடல் எனப்படும்.

**7.வாராத அதனான் வந்தது முடித்தல்:** ஒன்றனை வகுத்துக் காட்டி அதற்குக் கூறாத இலக்கணத்தைக் கூறிய இலக்கணம் கொண்டு முடித்தல்.

**8.வந்தது கொண்டு வாராதது முடித்தல்:** ஒன்றனை வகுத்துக் காட்டி அதற்குக் கூறிய இலக்கணத்தைக் கொண்டு கூறாத ஒன்றற்கு இலக்கணம் கூறி முடித்தல்.

**9.முந்து மொழிந்ததன் தலைதடு மாற்று:** வரிசை முறையாக விவரிக்க வேண்டிய பொருளை ஒருபயன் கருதி முன்பின்னாக மாற்றிக் கூறுதல்.

**10.ஒப்பக் கூறல்:** ஒன்றற்கு இலக்கணம் கூறும் நிலையில் அவ்விலக்கணத்திற்கு ஒத்த பிறவற்றையும் ஒருசேரக் கூறி முடித்தல்.

**11.ஒருதலை மொழிதல்:** ஒன்றற்கு மாறுபட்ட இருபொருள் கூறப்படின் அவற்றுள் ஒன்றைத் துணிந்து கூறுதல்.

**12.தன்கோள் கூறல்:** பிறநூல் ஆசிரியர் கூறியதுபோல் கூறாமல் தன் கொள்கை தோன்றக் கூறுதல். வேற்றுமை ஏழ் என்னும் வடமொழிக் கருத்தை மறுத்து, வேற்றுமை எட்டு எனக் கூறுதல்.

**விளிகொள் வதன்கண் விளியோடு எட்டே**

**(தொல். சொல். வேற்றுமையியல். நூ.2)**

என விதி செய்தல்.

**13.உடம்பொடு புணர்த்தல்:** இலக்கண வகையால் கூறாமல் ஆசிரியர் கூறும் சூத்திரத்தில் அமைந்திருக்குமாறு கூறுதல்.

**ஆரும் அருவும் ஈரொடு சிவணும்.**

**(தொல். சொல். விளிமரபு. நூ.21)**

இதில் **ஆர்** என்பது **ஆரு** என நிற்பற்கு இலக்கணம் கூறவில்லை. ஆயினும் ஆசிரியர் உடன்பட்டுக் கூறிய இக்கருத்து விதியைப் போல் பிற இடங்களிலும் பின்பற்றப்படுதல்.

**14.பிறன்உடம்பட்டது தான்உடம்படுதல்:** பிற நூலாசிரியர் ஏற்றுக் கொண்ட கருத்திற்குத் தானும் உடன்படுதல்.

இரண்டாம் வேற்றுமை செயப்படுபொருட்கண் வரும் என்னும் பாணினியின் கருத்தைத் தொல்காப்பியரும் ஏற்றுக் கொள்ளல்.

**15.இறந்தது காத்தல்:** முன் அமைந்த சூத்திரத்தால் கூறப்படாத பொருளைப் பின்வருகின்ற சூத்திரத்தால் அமைத்தல்.

**16.எதிரது போற்றல்:** முற்கூறப்பட்ட சூத்திரத்தால் வருகின்ற சூத்திரத்தின் பொருளினையும் பாதுகாக்குமாறு வைத்தல்.

**17.மொழிவாம் என்றல்:** முன்னர்க் கூறவேண்டிய ஒன்றினைப் பின்னர் எடுத்துரைப்போம் எனக் கூறுதல்.

புணரியல் நிலையிடைக் குறுகலும் உரித்தே
உணரக் கூறின் முன்னர்த் தோன்றும். (தொல். எழுத்து. மொழி மரபு.நூ.2)

**18.கூறிற்று என்றல்:** பல பொருள்களை விரித்துக் கூறும் நிலையில் சில பொருளை மேற்சொல்லப்பட்டன என்று குறிப்பிடுதல்.

மாத்திரை வகையும் எழுத்தியல் வகையும்
மேற்கிளந் தன்ன என்மனார் புலவர். (செய்யுளியல். நூ.2)

**19.தான்குறி இடுதல்:** உலகத்தில் வழக்கில் இல்லாத ஒரு பொருளுக்கு ஆசிரியனே குறியாகிய பெயரினை இடுதல்.

உயர்திணை, அஃறிணை போன்ற சொல்லாட்சிகள்.

**20.ஒருதலை அன்மை முடிந்தது காட்டல்:** ஒரு பொருளுக்கெனக் கூறப்பட்ட இலக்கணத்தை அப்பொருளுக்கே அன்றிப் பிற பொருள்களுக்கும் பொதுவாக முடித்துக் காட்டுதல்.

**21.ஆணை கூறல்:** ஒரு பொருளைக் கூற வேண்டிய காரணத்தால் கூறாமல் தான் ஆராய்ச்சி செய்து உறுதிபடக் கூறுதல்.

பாணினி விளிவேற்றுமையை முதல் வேற்றுமையுள் அடக்கிக் கூறினார். ஆனால் தொல்காப்பியர் பெயரின் திரிபினை நன்கு ஆராய்ந்து அதனை விளி என்னும் எட்டாம் வேற்றுமை ஆக்கினார்.

**22.பல்பொருட்கு ஏற்பின் நல்லது கோடல்:** ஒரு சூத்திரம் பல பொருளுக்குப் பொருந்துமாயினும் அவற்றுள் நல்லதை மட்டும் பொருளாகக் கொள்ளுதல்.

**23.தொகுத்த மொழியான் வகுத்தனர் கோடல்:** தொகுத்துக் கூறிய சொல்லால் வேறாகி நிற்கும் பிறிதொரு பொருளையும் வகுத்துக் காட்டடல். இதனைச் சொல்லின் முடிவில் அப்பொருள் முடித்தல் என்றும் கூறுவர்.

குற்றியலுகர முறைப்பெயர் மருங்கின் (தொல்.சொல். விளிமரபு.நூ.9)
என்பதன்வழி மொழிமுதல் குற்றியலுகரத்தைக் கொள்ளுதல்.

**24.மறுதலை சிதைத்துத் தன்துணிபு உரைத்தல்:** பிறநூலாசிரியன் கூறிய கருத்தை மறுத்துத் தன்னுடைய கருத்தை வலிமை பொருந்தியதாகக் காட்டுதல்.

நெட்டெழுத்தை அடுத்து வரும் அளபெடையைக் குற்றெழுத்தின் வேறுபாடு என்பாரை மறுத்து அதனை வேறோர் எழுத்தாகக் கூறுதல்.

**25.பிறன்கோள் கூறல்:** பிற நூலாசிரியனின் கொள்கையினை எடுத்துரைத்தல்.

வேற்றுமை தாமே ஏழெனு மொழிப (தொல். சொல். வேற்றுமையியல்.நூ.1)

என்பது வடநூலாரின் வேற்றுமைக் கோட்பாடாகும்.

**26.அறியாது உடம்படல்:** தான் அறியாத பொருளைப் பிறர் கூறும் முறையால் அறிந்துகொண்டு அதற்கு உடன்படுதல். இது வழிநூல் ஆசிரியர்க்கு உரியது.

**27.பொருள்இடை இடுதல்:** ஒரு பொருளைக் கூறுகின்றபோது அதற்கு இனமாகிய பொருளைச் சேர்த்துக் கூறாமல் இடையீடு படக்கூறுதல்.

பெண்மை சுட்டிய (தொல். சொல். பெயரியல்.நூ.24)

என்னும் சூத்திரத்தை அடுத்து ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவியின் இலக்கணம் கூறாமல் இடையிட்டுக் கூறுதல்.

**28.எதிர்பொருள் உணர்த்தல்:** இனிக் கூற வேண்டுவது இதுவென உணர்த்துதல்.

**29.சொல்லின் எச்சம் சொல்லியாங்கு உணர்த்தல்:** பிரிநிலை முதலாகச் சொல்லப்பட்டவை எச்சங்களாகும். அவற்றிற்குக் கூறப்பட்ட பொருளின்படி சொற்பொருளைக் கொள்ளுதல்.

**30.தந்துபுணர்ந்து உரைத்தல்:** முன்னராயினும் பின்னராயினும் இடம்பெற்ற சூத்திரத்தின் சொல்லை இடைநிற்கும் சூத்திரத்தோடு சேர்த்துக் கூறிப் பொருள் விளக்கம் செய்தல்.

**31.ஞாபகம் கூறல்:** ஒரு சூத்திரத்தை இரண்டாக வரையறுத்துக் கொண்டு அவ்விரண்டற்கும் பொருள் கூறுதல்.

**32.உய்த்துக்கொண்டு உணர்த்தல்:** ஒரு சூத்திரத்தால் கூறப்பட்ட ஓரிலக்கணம் அதற்குப் பொருந்தாமை உள்ளதாகத் தோன்றியவிடத்து அதனைப் பொருந்துமாறு அமைத்துக் கொள்ளுதல்.

பனியென்னும் சொல்லிற்கு அத்தும் இன்னும் சாரியையாக வரும் என்பது தொல்காப்பிய விதி (உயிர் மயங்கியல்.நூ.39). அவற்றுள் இன் என்பதனை மட்டும் ஏற்புடையதாகக் கொள்ளுதல்.

**பிறவாறு கொள்ளப்படுவன :** 1.மாட்டெறிதல் 2.சொற்பொருள் விரித்தல் 3.ஒன்றின முடித்தல் 4.தன்னின முடித்தல் என்பவற்றையும் கூறுகிறார் இளம்பூரணர். மேலும் சொல்லிய அல்ல பிற என்றதனால் ஆற்றொழுக்கு, அரிமா நோக்கு, தவளைப் பாய்த்து, பருந்து வீழ்வு என்னும் சூத்திரக் கிடக்கை நிலைகளையும் ஆதிவிளக்கு, மத்திம தீபம், இறுதி விளக்கு என்னும் பொருள்கோள் நிலைகளையும் உத்தி வகைகள் எனக் கூறுகின்றார். (112)